பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 13 வெள்ளிக்கிழமை 29.08.2025 கதிர் 292

## இனி அது ரகசியம் அல்ல!

தமிழ்அரசுக்கட்சியின்செயலாளர் சுமந்திரனிடம் கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகை ஒன்று நேற்று தனது உள் பக்கத்தில் தலைப்புச் செய்தியாக பகிரங்க ☞ 2

# உள்ளூராட்சி மன்ற நிர்வாகங்களில் பெருமளவு இலஞ்ச, ஊழல் மோசடி

### ஆணைக்குழுத் தலைவர் குற்றச்சாட்டு

உள்ளூராட்சி மன்றத் நிர்வாகத்தில் பெருமளவில் இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகள் இடம்பெறுகின்றன. பொதுமக்கள் உள்ளூராட்சிமன்றங்களுக்குசெல்லும்போது அவர்களுக்கான சேவை வழங்கல் தாமதப்படுத்தப்படுகிறது. இதனைத்தொடர்ந்து இலஞ்சம் கோரப்படுகிறது. உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும் என இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க தெரிவித்தார்.

மேல்மாகாணசபைகேட்போர்கூடத்தில் நடைபெற்ற இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழு மற்றும் பொது நிர்வாகம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் இணைந்து உள்ளூராட்சி பிரதிநிதிகளுக்கு ஊழல் எதிர்ப்புச் சட்டங்கள் குறித்து தெளிவை வழங்கும் ☞ 6

## அரசியல் இடையூறு, அழுத்தமின்றி பொலிஸாரால் செயற்பட முடிகிறது

### பொலிஸ் மா அதிபர் கூறுகிறார்

நாட்டில் திட்டமிட்ட குற்றச்செயல்களை ஒடுக்க வேண்டுமானால்சர்வதேசபொலிஸாரின்ஒத்துழைப்பு அவசியமாகும். எனவே நாம் சர்வதேசத்துடன் சிறந்த உறவை மேம்படுத்தி வருகிறோம். அதேபோன்று தற்போது பொலிஸ் திணைக்களத்துக்கு அரசியல் இடையூறு மற்றும் அழுத்தமின்றி செயற்பட முடிந்துள்ளதாக பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களாகக் கூறப்படும் ☞ 6

# மாகாண தேர்தல் குறித்து ஆராயும் தெரிவுக்குழு அமைக்க யோசனை

### தயாசிறி எம்.பி. தெரிவிப்பு

மாகாணசபைத் தேர்தல் குறித்து நாடாளுமன்றதெரிவுக்குழுவொன்றை நியமிக்கும் யோசனையை முன்வைக்க எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம். காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தலை நடத்த ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள்உட்படசகலதரப்பினரும் பொது கொள்கையின் அடிப்படையில் செயற்படவேண்டும்எனஐக்கியமக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தினார்.

மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைதொடர்பில்பெப்ரல்அமைப்பு நேற்றுகொழும்பில்ஏற்பாடுசெய்திருந்த கலந்துரையாடலில்உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார், மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். பழைய தேர்தல் முறைமையா அல்லது புதிய தேர்தல் முறைமையா என்பதில் எமக்கு எவ்வித சிக்கலும் கிடையாது. நாடாளுமன்றத்துக்குள் இது தொடர்பில் இதுவரையில் எவ்வித கலந்துரையாடல்களும் தொடங்கப்படவில்லை என்றார்.

இதனைத் தொடர்ந்து கருத்து ☞ 2

## ஐ.தே.கவையும் ஐ.ம.சவையும் இணைக்க மீண்டும் முயற்சி

ஐக்கிய தேசிய கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைக்கும் முயற்சிகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. இந்த இரு கட்சிகளும் மீண்டும் இணையவேண்டும் என்றும் அதனை அடிப்படையாகக் கொண்டு பெரும் கூட்டணியை உருவாக்க முடியும் என்றும் நம்புகிறார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் ☞ 2

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் மீது ஒடுக்குமுறை கட்டவிழ்த்துவிடப்படுகிறது

### ஐ.நா. நடவடிக்கைகள் குழு விசனம்

இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறிந்துகொள்வதை இலக்காகக்கொண்டு இயங்கிவரும் உறவுகள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கு எதிராகத் தொடர்ந்து ஒடுக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டுவருவதாகத் தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன எனறு வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் நடவடிக்கைக்குழு விசனம் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகி, ஒக்டோபர் 3 வரை நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தொடரின் 3 ஆவது பக்க நிகழ்வாக 'அபிவிருத்திக்கான உரிமை உள்ளடங்கலாக சகல மனித உரிமைகள், சிவில், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளைப்பாதுகாத்தலும்மேம்படுத்தலும்' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலைமுன்னிட்டுவலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் நடவடிக்கைக்குழுவினால் ☞ 2

## புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு அடுத்த வாரம் நிறைவுறும்

### நிபுணர் குழுத் தலைவர் தெரிவிப்பு

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வரைபு செய்வது தொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் பணிகள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நிறைவடையும் என அதன் தலைவர் சட்டத்தரணி ரியன்சி அர்சகுலரத்ன தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வரைபு செய்வது தொடர்பில் நியமிக்கப்பட்ட குழு ☞ 6

## சஜித் – ரணில் – நாமல் இணைந்து சர்வாதிகாரத்தை எதிர்க்கவேண்டும்

### முன்னாள் எம்.பி. தொலவத்தவின் விருப்பம் இது

ரணில், சஜித், நாமல் இணைந்து இந்த சர்வாதிகார ஆளும்தரப்புக்கு எதிராக செயற்பட வேண்டும். முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்கு செல்ல வேண்டிய சரியான நேரம் இதுவாகும். சிலிண்டருக்கான தேசிய பட்டியலில் நாடாளுமன்றம் சென்ற இருவரில் ஒருவர் பதவி விலகி ரணிலுக்கு வாய்ப்பளிக்கவேண்டும்என்றுமுன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் புதன்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது ☞ 2

## ரணில் கைதின்போது நீதிமன்ற சம்பிரதாயம் மீறப்பட்டுள்ளது

### பொலிஸும் சுயாதீனமாக இல்லை என்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கைது விவகாரத்தில்பொலிஸ்சுயாதீனமாகச் செயற்படவில்லை. நீதித்துறை சம்பிரதாயங்கள் மீறப்பட்டுள்ளன. அவை குறித்து சட்டமா அதிபர் திணைக்களமும், பொலிஸ் ஆணைக்குழுவும்விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று வியாழக் கிழமை செய்தியாளர்களிடம் ☞ 2

## எல்லை நிர்ணய மீளாய்வுக் குழு மீது வழக்குத் தாக்கல் செய்வதே சிறப்பு

### தேர்தல்கள் ஆணையாளர் கருத்து

எல்லை நிர்ணய ஆணைக்குழு நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பதித்த அறிக்கை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு போதுமான தெளிவிருந்ததா, அல்லது அறிக்கையின் ஒருபக்கத்தையாவது வாசித்து பார்த்தார்களா என்பது சந்தேகத்துக்குரியது என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எல்லை நிர்ணய குழு அறிக்கை தோற்கடிக்கப்பட்டவுடன் அப்போதைய பிரதமர் தலைமையில் எல்லை நிர்ணய மீளாய்வு குழுநியமிக்கப்பட்டது. இந்த குழு முறையாக ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

மன்னிப்புக் கோரியிருக்கிறது. 'அருண' என்ற சிங்களப் பத்திரிகையே இவ்வாறு மன்னிப்புக் கோரியிருந்தது.

இந்தப் பத்திரிகை தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீரவின் 'அசோசியேட் பப்ளிகேசன்ஸ்' நிறுவனத்தின் சிங்கள வெளியீடு. இதே குழுமம் 'திமோர்னிங்' மற்றும் 'தமிழன்' ஆகிய பத்திரிகைகளையும் வெளியிடுகின்றது. அருண பத்திரிகை 2019 தேர்தல் சமயத்தில் வடக்கில் சுமந்திரன் ஆற்றிய உரை என்று கூறி வெளியிட்ட செய்தி ஒன்று தொடர்பிலேயே நேற்று பகிரங்க மன்னிப்புக் கோரியிருந்தது.

2019 அரசுத் தலைவர் தேர்தல் பரப்புரையின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சஜித் பிரேமதாசவை ஆதரித்தது. எதிர்ப்புறத்தில் கோட்டாபய ராஜபக்ச போட்டியிட்டார். அருண பத்திரிகையின் உரிமையாளரான திலித் ஜயவீர அப்போது நாடாளுமன்ற உறுப்பினரில்லை. ஆனால், கோட்டாபய ராஜபக்சவுக்கு மிகவும் நெருக்கமானவர் என்று அறியப்படுபவர். இந்தப் பின்னணியில் "சிங்கள மக்களைத் தோற்கடிக்க சஜித் பிரேமதாசவுக்கு வாக்களியுங்கள்" என்று சுமந்திரன் உரையாற்றினார் என அந்தச் செய்திக்குத் தலைப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், தேர்தல் பரப்புரை மேடைகள் எதிலும் சுமந்திரன் அப்படி உரையாற்றியிருக்கவில்லை. அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அவர், சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் முடிவைக் கட்சி எடுப்பதற்கான முக்கிய புள்ளியாக இருந்தார் என்று வழக்கம்போலக் குற்றஞ்சாட்டப்பட்டு வந்தார் எனினும், சிங்கள தமிழ் இனவாதத்தை அவர் கையில் எடுத்திருக்கவில்லை.

இருந்தாலும் பேரினவாதத்தைத் தூண்டிவிட்டு கோட்டாபயவை வெற்றிபெறச் செய்யும் உத்தியின் ஒரு பகுதியாக இந்தச் செய்தியை அருண வெளியிட்டது என்று அப்போதே பலரும் விமர்சனம் செய்திருந்தனர். அந்தச் செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை என்பதை சுமந்திரன் உடனடியாகவே மறுத்திருந்தார். அதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்திருந்தார். 'அருண' மட்டுமல்ல மற்றொரு சிங்களப் பத்திரிகையான 'மௌபிம'வும் அதன் சகோதரப் பத்திரிகையான 'சிலோன் ருடே' ஆங்கிலப் பத்திரிகை ஆகியனவும் இதே போன்ற செய்தியை வெளியிட்டிருந்தன. அந்தப் பத்திரிகைகளுக்கு எதிராகவும் சுமந்திரன் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இதில் 'அருண' பத்திரிகை நிறுவனத்தின் சார்பில் நீதிமன்றத்தில் காணப்பட்ட இணக்கத்திற்கு அமைவாக, அந்தப் பத்திரிகை சுமந்திரனின் செய்தியை எந்தப் பக்கத்தில் எவ்வளவு முக்கியத்துவத்துடன் வெளியிட்டதோ அதேயளவு முக்கியத்துவத்துடன் பகிரங்க மன்னிப்பையும் இப்போது வெளியிட்டுள்ளது.

"இந்த செய்தித்தாளின் 2019 நவம்பர் 11 வெளியிடப்பட்ட பதிப்பின் 19ஆவது பக்கத்தில் வெளியான கட்டுரையை நாங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். அதற்காக சட்டத்தரணி மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் மன்னிப்புக் கோருகிறோம்.

அந்தக் கட்டுரைக்கு 'தெற்கில் சிங்களவர்களைத் தோற்கடிக்க சஜித்துக்கு வாக்களியுங்கள் -- நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்' என்ற தலைப்பு இடப்பட்டிருந்தது, மேலும் அந்தத் தலைப்பில் குற்றம் சுமத்தப்பட்டபடி சுமந்திரன் உரையாற்றியதாக தவறாக அறிக்கையிடப்பட்டிருந்தது. உண்மையில், நமது செய்தித்தாளில் குற்றம் சுமத்தப்பட்டபடி மந்திரன் எப்போதும் உரையாற்றவில்லை. எனவே, குறித்த கட்டுரையில் உள்ள குற்றச்சாட்டுகளை நாங்கள் திரும்பப்பெறுகிறோம்.

இதனால் சுமந்திரனுக்கு ஏற்பட்ட மன வேதனை மற்றும் அவரது மாசற்ற மாண்பிற்கும் ஏற்பட்ட சேதத்திற்காக நாங்கள் நிபந்தனையற்ற மன்னிப்பை கோருகிறோம் என்று அந்த மன்னிப்புச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பத்திரிகைச் செய்திக்கெதிராக சுமந்திரன் தாக்கல் செய்த வழக்கில் ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீடு கேட்டிருந்தார் சுமந்திரன். இப்போது அந்தப் பத்திரிகை அவரிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்டதன் அடிப்படையில் அது இணக்கமாகத் தீர்த்துக்கொள்ளப்படும் சாத்தியங்கள் இருக்கின்றன. அதேசமயம் ஏனைய இரு பத்திரிகைகளுக்கும் எதிரான வழக்குகள் தொடர்ந்தும் நடக்கும்.

சுமந்திரன் தாக்கல் செய்த வழக்குகள் முடிவுக் கட்டத்தை நெருக்கிய சமயத்திலேயே 'அருண' தனது மன்னிப்பைக் கோரியிருந்தது. மற்றைய பத்திரிகைகளுக்கு எதிரான வழக்குகளும் முடிவை நெருக்கியிருப்பதால் அடுத்தஓரிருதவணைகளில் அவற்றின் தீர்ப்பும் வெளியாகும் சாத்தியங்கள் இருக்கின்றன.

2015இல் நல்லாட்சி என்று சொல்லப்பட்ட ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் இலங்கையின் தேசிய அரசியலிலும் சுமந்திரன் மிக முக்கிய சக்தியாக வளர்ந்து வந்துகொண்டிருந்தார். சிங்கள மக்கள் மத்தியிலும் நன்கு அறியப்பட்ட தலைவராகவும் அவர் பரிணாம வளர்ச்சியை எட்டியிருந்தார். பிரதமர் போன்ற உயர் பதவிகளுக்கு அவரது பெயர் பரிசீலிக்கப்படக்கூடிய இடத்தை அவர் எட்டியிருந்தார். இந்தத் தருணத்தில் இத்தகைய செய்தி சிங்கள மக்கள் மத்தியில் வளர்ந்து வந்த அவரது செல்வாக்கையும் இடியோடு உருக்குலைக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தது. இந்தப் பகிரங்க மன்னிப்பு அதனை மீட்டெடுத்து சுமந்திரனுக்கு வழங்குமா என்பதற்கு காலம்தான் பதில் சொல்லவேண்டும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மாகாண....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவன்ன, சரியானதைச் செய்வதற்காகவே நாட்டு மக்கள் இந்த ஆளும்தரப்பை ஆட்சிக்குக்கொண்டு வந்தார்கள். ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்த ஒருவருடம் நிறைவடையவுள்ளது. இருப்பினும் மாகாண சபைத் தேர்தலை நடத்த ஆளும்தரப்பு எவ்வித நடவடிக்கைகளையும் தொடங்கவில்லை. தேர்தலுக்கு ஆளும்தரப்பு தயாரா என்பதும் தெரியவில்லை - என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன், மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கொண்டு வந்த தனிநபர் பிரேரணை குறித்து சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க 'சுமந்திரன் கொண்டு வந்த அதே பிரேரணையா' என்று கேள்வியெழுப்பியுள்ளார். அதற்கு 'ஆம்' என்று பதில் கிடைத்தவுடன் 'அவ்வாறாயின் நாங்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கபோவதில்லை' என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஆளும்தரப்பு அந்தப் பிரேரணையை நிறைவேற்றவில்லை. மாகாண சபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு நாடாளுமன்றம் விரைவாக தீர்வு காண வேண்டும் என்றார்.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, மாகாண சபைத் தேர்தல் குறித்து நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிப்பதற்கு எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம். காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தலை நடத்த ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் உட்பட சகல தரப்பினரும் பொதுகொள்கையின் அடிப்படையில் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

## எல்லை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படவில்லை. ஆகவே அந்த குழுவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தால் அது சிறந்ததாக அமையும் எனவும் குறிப்பிட்டார்.

மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமை தொடர்பில் பெப்ரல் அமைப்பு நேற்று கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடலில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த கலந்துரையாடலில் அரசியல்வாதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பலர் கலந்துக்கொண்டிருந்தனர்.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க அங்கு மேலும் தெரிவித்ததாவது:

எல்லை நிர்ணயம் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் உள்ளடக்கம் பற்றி முழுமையான தெளிவு இல்லாமல் தான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிக்கைக்கு எதிராக வாக்களித்தார்கள். அதனால் தான் இந்த அறிக்கை புறக்கணிக்கப்பட்டது என்பதையும் குறிப்பிடவேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை பிற்போடுவதற்கா, அல்லது தேர்தலை நடத்துவதற்காக எல்லை நிர்ணயம் தொடர்பான குழு நியமிக்கப்பட்டது என்ற சந்தேகமும் எமக்கிருந்தது. அரசியல்வாதிகளுக்கு ஆலோசனை வழங்க ஒருதரப்பினர் இருந்தார்கள். அவர்கள் அனைத்து இடங்களுக்கும் சென்று ஒரே கயிற்றையே ஆலோசனையாக வழங்கினார்கள்.

மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக உள்ளோம். தேர்தலை நடத்துவதற்குரிய சூழலை நாடாளுமன்றம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். புதிய தேர்தல் முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம்.

எல்லை நிர்ணய குழு அறிக்கை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் இரண்டுமாத காலத்தை நிர்ணயித்து எல்லை நிர்ணய மீளாய்வுக் குழு நியமிக்கப்பட்டது. இருப்பினும் இந்தக் குழு ஒருமுறை கூடவில்லை. அப்போதைய பிரதமர் தலைமையில் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தால் அது சிறந்ததாக அமையும்.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எல்லை நிர்ணய குழு அறிக்கையின் ஒரு பக்கத்தையாவது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்த்திருப்பார்களா என்பது சந்தேகமானது - என்றார்.

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாகாண சபைத் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு எல்லை நிர்ணய குழு ஒன்று நியமிக்கப்பட்டு நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளினால் தோற்டிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அப்போதைய அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எல்லை நிர்ணய மீளாய்வு குழு ஒன்றை நியமித்தார். இருப்பினும் இந்த குறித்த காலத்துக்குள் மீளாய்வு அறிக்கையை தயாரிக்கவுமில்லை, நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவுமில்லை.

## ஐ.தே.கவையும்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதன்கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுக் காரணிகளின்போது எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்துச் செயற்படவேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு காணப்படுகிறது. முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விவகாரத்தில் ஆளும்தரப்பு தனக்குத் தேவையானவாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தை வழி நடத்தி அவரைப் பழிவாங்கியுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் எதிர்க்கட்சிகள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் அவதானம் செலுத்தியிருக்கின்றோம்.

மக்களுக்கு இவ்வாறு அநீதி இழைக்கப் பட்டாலும் நாம் அவர்களுக்காக குரல் கொடுப்போம். வழக்கு விசாரணையின்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டால் அவர்களுக்கான சட்ட உதவிகளை நாம் வழங்குவோம். அரசியல் ரீதியில் ஒன்றிணைவதாயின் அதற்குக் கொள்கை ரீதியில் இணக்கம் காணப்படவேண்டும். அதற்கு இன்னும் காலமிருக்கிறது. அது தொடர்பிலும் அவதானம் செலுத்தியிருக்கின்றோம்.

ஐக்கிய தேசிய கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணையவேண்டும். அதனை அடிப்படையாகக்கொண்டு பெரும்கூட்டணியை எம்மால் உருவாக்க முடியும். இது எமது இரு கட்சிகளினதும் ஆதரவாளர்களது எதிர்பார்ப்பாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் சுமூகமான பேச்சு நடத்தப்படுகின்றது இம்முறை இந்த முயற்சி வெற்றியளிக்கும் என்று நம்புகின்றோம் என்றார்.

## சஜித்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்தார். அவர மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பு ரீதியான சர்வாதிகாரம் முடிவுக்குக்கொண்டு வரப்படவேண்டும். அதற்காக எதிர்க்கட்சிகள் இணைந்து செயற்படுவதற்குத் தீர்மானித்துள்ளோம். பிரிந்து சென்ற இரு கட்சிகளுக்கு மீண்டும் இணைவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எந்த வகையிலாவது ஜனநாயகத்தைப் பாதுகாக்கவேண்டும் என்பதே எமது இலக்காகும். அனைவரும் ஒன்றிணைய வேண்டிய சூழல் தானாக உருவாகியுள்ளது. சஜித் பிரேமதாசவுடன் எமக்கு எவ்வித தொடர்பும் இல்லை. ஆனால் இன்று அவருடன் இணைந்து செயற்படுகின்றோம். இதுவே காலத்தின் தேவையாகும்.

ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் நிச்சயம் ஒன்றிணைய முடியும். கொள்கை ரீதியில் எமக்கு அது கடினம் என்றாலும் அவர்களால் இணைந்து பயணிக்க முடியும். நாமும் அதனையே வலியுறுத்துகின்றோம். நீதிமன்றத்தில் சில சட்டத்தரணிகளுக்கு கூட அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. யாருடைய ஆலோசனைக்கமைய பொலிஸார் அவ்வாறு செயற்பட்டனர் என்பது தெரியாது. நிறைவேற்றதிகாரத்தின் தேவைக்கேற்ப பொலிஸார் செயற்படக் கூடாது.

தற்போதைய ஆளும்தரப்பு சர்வாதிகார ஆட்சியை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது. இதற்கெதிராக அனைவரும் இணையவேண்டும். சிலிண்டர் சின்னத்துக்கு மக்கள் 20 இலட்சம் வாக்குகளை வழங்கியிருக்கின்றனர். அதன் பின்னர் பொதுத் தேர்தலில் சிலிண்டர் சின்னத்துக்கு இரு தேசிய பட்டியல் ஆசனங்களும் கிடைத்துள்ளன. ஜனநாயகவாதியான ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்கு செல்லவேண்டிய தகுந்த சந்தர்ப்பம் இதுவாகும். சிலிண்டருக்கான தேசிய பட்டியலில் நாடாளுமன்றம் சென்ற இருவரில் ஒருவர் பதவி விலகி, ரணிலுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

மக்கள் மீதான அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் நிச்சயம் குரல் கொடுப்போம். ரணில், சஜித், நாமல் இணைந்து இந்த சர்வாதிகார ஆளும்தரப்புக்கு எதிராக செயற்பட வேண்டும். என்றார்.

## காணாமலாக்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலிந்து காணாமலாக்கப்படல்கள் விவகாரத்தின் உலகளாவிய நிலைவரம் குறித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை இலங்கை உள்ளடங்கலாக உலகநாடுகள் பலவற்றில் வலிந்து காணாமலாக்கப்படல்கள் விவகாரத்தின் மோசமான நிலைவரம் தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தும், கரிசனைகளை வெளிப்படுத்தியும் தமக்குக் கடிதங்கள் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறிந்துகொள்வதை இலக்காகக்கொண்டு இயங்கிவரும் உறவுகள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கு எதிராகத் தொடர்ந்து ஒடுக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டுவருவதாகத் தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இதுகுறித்த தமது கரிசனையை தாம் ஆளும்தரப்புக்குத் தெரியப்படுத்தியிருப்பதாகவும், நாட்டில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் பணியாற்றிவரும் ஏனைய மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மீது ஏற்பட்டிருக்கும் தாக்கங்கள் குறித்துத் தெளிவுபடுத்தியிருப்பதாகவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ரணில்.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ் ஒரு நிறுவனமாகச் சுயாதீனப் படுத்தப்படவேண்டியது குறித்து நாம் பல தசாப்தங்களாகப் பேசிக்கொண்டிருக்கின்றோம். அதற்காகவே பொலிஸ் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. அந்த வகையில் பொலிஸ் அதிகாரிகளும் சுயாதீனமாகச் செயற்படவேண்டும். அவர்கள் சுயாதீனமாகச் செயற்படுவதற்கான சூழல் உருவாக்கிக் கொடுக்கப்படவேண்டும். வரலாற்றில் முதன் முறையான குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவி ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரியொருவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

குறித்த பொலிஸ் அதிகாரிக்கான ஒப்பந்தம் வருடாந்தம் நீடிக்கப்பட வேண்டுமெனில் அவர் அரசுத் தலைவர் மற்றும் அமைச்சரவையை திருப்திப்படுத்தும் வகையிலேயே செயற்படவேண்டும். முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதன் பின்னணியில் பொலிஸின் சுயாதீனத்தன்மை இழக்கப்பட்டுள்ளமை துரதிஷ்டவசமானதாகும்.

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# நாளைய போராட்டத்திற்கு பேராதரவு தருக
## செல்வராணி கோரிக்கை

(பாறுக் ஷிஹான்)

சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினமான நாளை வடக்கு கிழக்கில் உறவுகளால் நடத்தப்படவுள்ள போராட்டத்திற்கு ஆதரவு தாருங்கள் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அம்பாறை மாவட்ட சங்கத் தலைவி செல்வராணி தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம், கல்முனை நகரில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த நிகழ்வினையொட்டி வடக்கில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பேரணில இடம்பெறவுள்ளது. நல்லூர் முத்திரைச்சந்தி, சங்கிலியன் சிலையிலிருந்து தொடங்கி செம்மணி வரை இப்பேரணி இடம்பெறும். அந்தஇடத்தில் கவனயீர்ப்புப் போராட்டமும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

அதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடிப் பாலத்தில் இருந்து போராட்டம் தொடங்கி காந்தி பூங்கா வரை ஊர்தி ஊர்வலத்துடன் சென்று கவனஈர்ப்பு போராட்டம் இடம் பெறும் .

கடந்த 17 வருட காலமாக எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று நாங்கள் நீதி கேட்டு போராடிக் கொண்டிருக்கிறோம். 16 வருட காலங்களாக இலங்கை ஆட்சியில் இருந்த பல அரசுத் தலைவர்களுடன் எங்கள் உறவுகளுக்கு உண்மையில் என்ன நடந்தது என்பதைக் கேட்டுக் கதறிவிட்டோம். உண்மையை கூறும்படியும் கேட்டிருக்கின்றோம். எங்களது உறவுகளை உயிருடன் கூட்டி சென்று காணாமல் ஆக்கிய இலங்கை இராணுவ படையினரிடம் கேட்டு அவர்களுக்கு என்ன நடந்தது என்று கூறுங்கள் எனக் கேட்டு வருக்கின்றோம்.

இது தொடர்பில் விசாரிக்க ஆளும்தரப்புக்கள் நிறுவுவதாகச் சொல்லும் உள்ளக பொறிமுறையில் எமக்கு நம்பிக்கை இல்லை. தற்போது நாங்கள் சர்வதேச பொறிமுறையை நாடி இருக்கின்றோம். சர்வதேச பொறிமுறைக்கு ஊடாக எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையையும் நீதியையும் பெற்று தர வேண்டும் என்று நாங்கள் இப்போராட்டத்தில் கேட்க இருக்கிறோம். செப்டம்பர் மாதம் நடைபெற உள்ள ஜெனிவா கூட்டத்தொடரில் எங்கள் உறவுகளுக்கு நீதி கிடைக்க வழியேற்படுத்தப்படவேண்டும்.

அதேநேரம் எமது அரசியல்வாதிகள் அனைவரும் சேர்ந்து எங்களது உறவுகளுக்காக அங்கு சென்று குரல் கொடுத்து இலங்கையில் ஒரு இனப்படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையை இந்த உலகத்துக்கு கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுநிற்கின்றேன்.

எங்களுடன் இதுவரை போராடிய 350 உறவுகளை நாங்கள் இழந்து இருக்கின்றோம். அந்த ஒவ்வொரு உறவும் தனது பிள்ளை வருவான் என்றும் கணவர் வருவார் என்றும் எதிர் பார்த்தவர்கள்தான்.

எனவேதான் நீங்கள் அனைவரும் நாளை நடக்க இருக்கின்ற போராட்டத்தில் தோளோடு தோள் நின்று எங்களுக்கு ஆதரவு வழங்கி எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை தெரியும் வரை இந்த போராட்டத்திற்கு ஆதரவு கேட்டு நிற்கின்றோம்.

அது மாத்திரமல்ல எமது இந்த போராட்டத்திற்கு அரசியல்வாதிகள் அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஊடகவியலாளர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் மதகுருமார் ஆட்டோ சங்கத்தினர் மீனவர் சங்கத்தினர் முதியோர் சங்கத்தினர் அனைத்து பொதுமக்களும் பாதிக்கப்பட்ட தரப்புகளும் எங்களுடன் வந்து இந்த போராட்டத்திற்கு ஆதரவு தர வேண்டும் - என்றார்.

# மருதனார் மடம் ஆஞ்சநேயருக்கு நேற்று சிறப்பாகக் திருக்குடமுழுக்கு

யாழ். மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய திருக் குடமு-முக்கு சிறப்பாக நடைபெற்றது இதற்கான பூர்வாங்க கிரியைகள் ஒகஸ்ட் 20 தொடங்கியது. எண்ணை காப்பு கிரியைகள் ஒகஸ்ட் 25 தொடக்கம் 27 வரை நடைபெற்றன நேற்று அதிகாலையில் இருந்து விசேட பூசைகள் நடைபெற்று சுந்தர ஆஞ்சநேயருக்கு மகா திருக்குடமுழுக்கு இனிதே நடைபெற்றது.

இன்று முதல் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலா ஆபிசேக பூசைகள் இவ் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற உள்ளமைன. நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆஞ்சநேய பக்தர்கள் திருக்குடமுழுக்கு நிகழ்வில் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டனர்

# கல்முனையில் பேருந்து மோதி மாநகர சபைக் காவலர் இறப்பு

(அஸ்லம் மௌலானா)



கல்முனை மாநகர சபையில் காவலாளியாக கடமையாற்றும் டேவிட் பாஸ்கரன் (வயது-56) வீதி விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இவர் தனது இரவு நேரக் கடமையை முடித்துக் கொண்டு நேற்றுக் காலை மட்டக்களப்பு- கல்முனை பிரதான வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில், மருதமுனை மக்கள் மண்டபம் முன்பாக நேர் எதிரே வந்த இ.போ.ச. பேருந்து ஒன்று மோதி விபத்துக்குள்ளானார். அந்த இடத்திலேயே அவர் உயிரிழந்துவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

2001ஆம் ஆண்டு கல்முனை மாநகர சபையில் காவலாளியாக நிரந்தர நியமனம் பெற்ற டேவிட் பாஸ்கரன், சுமார் 24 வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ளார். கடமையில் பொறுப்புணர்வு மற்றும் அர்ப்பணிப்பு மிக்கவராக காணப்பட்ட இவர், கல்முனை மாநகர சபையின் சிறந்த ஊழியர் என்ற பாராட்டையும் பெற்றுள்ளார்.

# அமரர் தொண்டமானின் பிறந்த நாள் நாளை



1913ஆம்ஆண்டுஒகஸ்ட்30பிறந்த அமரர். சௌமியமூர்த்திதொண்டமான் அவர்களின் 112 ஆவது பிறந்த தினம் நாளை நினைவேந்தப்படவுள்ளது.

சுதந்திர இலங்கையில் உருவான முதலாவது நாடாளுமன்றத்தில் உறுப்பினராக அங்கம் வகித்தவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான். இலங்கை, இந்திய காங்கிரஸ் உருவாக்கத்துக்கு முக்கிய பங்களிப்பு வழங்கிய அவர், அதன் தலைவராகவும் செயற்பட்டுள்ளார். இலங்கை, இந்திய காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக பெயர் மாற்றம் பெற்றது முதல்அதன்தலைவராகச்செயற்பட்டார்.

இலங்கை ஆளும்தரப்புக்களில் முக்கிய பல அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளார். இலங்கையில் சிறந்ததொரு தேசிய தலைவராகவும் செயற்பட்டார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஐ.நா. மனித உரிமைகள் சபை

இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் சார்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (Federal Party) சமீபத்தில் ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபை உறுப்பு நாடுகளுக்கு எழுதியுள்ள கடிதம், நாட்டின் மனித உரிமை நிலமைகள் தொடர்பில் மிகக் கடுமையான கவலைகளை மீண்டும் வெளிப்படுத்துகிறது. அந்தக் கடிதம் சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள், வெறும் அரசியல் உரைகளோ அல்லது உணர்ச்சி வெடிப்புகளோ அல்ல. மாறாக, பத்து ஆண்டுகளுக்கும் மேலாக உலக அரங்கில் விவாதிக்கப்பட்டு வரும் 'தமிழ் தேசியப் பிரச்சினைக்கு உரிய தீர்வு தேவைப்படுவதை வலியுறுத்தும் சான்றுகளாகும்.

தமிழ் மக்கள் இந்தத் தீவில் தொன்றுதொட்டே வாழ்ந்து வருகிறார்கள். வடக்கு கிழக்கைத் தமது பாரம்பரிய தாயகமாகக் கொண்டவர்களாகவும், தனித்த மொழி, மதம், கலாசாரம் ஆகியவற்றால் தனித்த இனமாகவும் உள்ளனர். ஆனால், 1948 சுதந்திரத்திற்குப் பின் அமல்படுத்தப்பட்ட அரசியல், சட்ட, நிர்வாக மாற்றங்கள் அனைத்தும் பெரும்பான்மையினருக்கு சாதகமாகவும், சிறுபான்மையினருக்கு பாதகமாகவும் அமைந்துவிட்டன.

'ஒருமைப்பாட்டுச் சாசனம்' (Unitary State), புத்த மதத்துக்கு 'முன்னுரிமை' வழங்குதல், சிங்கள மொழியை மட்டுமே அதிகாரப்பூர்வ மொழியாக்கம் செய்வது போன்ற அம்சங்கள் தமிழ் மக்களிடம் அந்நிய உணர்வை அதிகரித்தன. இதற்கு மேலாக, அடிக்கடி நிகழ்ந்த வன்முறைத் தாக்குதல்கள், பாகுபாடு மற்றும் அரசின் புறக்கணிப்பு ஆகியவை, 1976 இல் தமிழரின் சுயாட்சிக் கோரிக்கைக்கு வழிவகுத்தன.

பின்னர் ஆயுதப் போராட்டமாக உருமாறிய இக்கோரிக்கை 2009 இல் இராணுவ ரீதியாக அடக்கப்பட்டாலும், அந்தப் போர் முடிவின் போது நிகழ்ந்த கொடூரங்கள், போர் குற்றங்கள், மனிதத்தன்மைக்கெதிரான குற்றங்கள், மற்றும் இனப்படுகொலை குற்றச்சாட்டுகள் இன்னும் உலக அரங்கில் விசாரணைக்குக் காத்திருக்கின்றன.

சமீபத்தில்யாழ்ப்பாணத்தில்செம்மண்ணி–சிந்துபதிஇந்துக்கல்லறையில் கண்டுபிடிக்கப்பட்ட சுமார் 150 எலும்புக்கூடுகள், நாட்டின் கடந்தகாலத்தை மறந்துவிட முடியாது என்பதை உறுதிப்படுத்துகின்றன. பெரும்பாலான எலும்புக்கூடுகள் உடைகளின்றி கிடைத்திருப்பதும், அப்பகுதியில் மேலும் நூற்றுக்கணக்கான உடல்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என ஸ்கேனிங் சோதனைகள் சுட்டிக்காட்டுவதும், தமிழ் மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட கொடுமைகள் திட்டமிட்ட இனப்படுகொலை நோக்கத்துடன் இருந்தனவோ என்ற கேள்வியை வலுப்படுத்துகின்றன.

ஏற்கனவே 1999 இல் ஒரு படைவீரர் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியில், இலங்கை இராணுவம் நூற்றுக்கணக்கான உடல்களை அப்பகுதியில் புதைத்தது என தெரிவித்திருந்தார். இப்போது அந்தச் சாட்சிக்கு உயிருள்ள சான்றுகள் கிடைத்திருப்பதால், அரசின் மறுப்பு நிலைப்பாடு சர்வதேச ரீதியில் நிலைத்திருக்காது.

இக்கடிதம் வலியுறுத்தியுள்ளதாவது, உள்ளூர் விசாரணை முறைகள் 15 ஆண்டுகளுக்கும் மேலாக பயனற்றவை என்பதை வரலாறு காட்டிவிட்டது. எனவே இனி 'உள்ளூர் அமைப்புகளின் நம்பகத்தன்மை' என்ற பிம்பத்தின் பின்னால் மறைந்து விடாமல், சர்வதேச சமூகம் உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

சர்வதேச நீதிமன்ற விசாரணை (ICJ): மியான்மர் வழக்கில் போலவே, இலங்கையை சர்வதேச நீதிமன்றத்திற்கு பரிந்துரைப்பது. செம்மண்ணியில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய சான்றுகள், இனப்படுகொலை நோக்கத்தைக் காட்டும் முக்கிய அடிப்படையாகும்.

OSLAP விரிவாக்கம்: தற்போது ஆதாரங்களை சேகரித்து பாதுகாக்கும் OSLAP திட்டத்தில், இனப்படுகொலை மற்றும் இனப்படுகொலை நோக்கம் தொடர்பான ஆதாரங்களை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

ரோம் ஒப்பந்தத்தில் கையெழுத்து: இலங்கை ரோம் சட்டத்தில் கையெழுத்திட்டு, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ICC) பொறுப்பு ஏற்க வேண்டிய கட்டாயத்தில் நிறுத்தப்பட வேண்டும்.

அரசியல் தீர்வு: தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான நிலையான தீர்வு– அதாவது அரசியல் அதிகாரப் பங்கீடு கொண்ட கூட்டாட்சி அரசியல் அமைப்பு – அவசரமாக தேவைப்படுகிறது. குறைந்தபட்சமாக, மாகாணசபைத் தேர்தல்களை தாமதமின்றி நடத்த வேண்டும்.

இன்றைய உலகில் மனித உரிமை மீறல்களை மறைக்க முடியாது. இலங்கை அரசின் வழக்கம் போல உள்ளூர் குழுக்கள், அலுவலகங்கள் மூலம் நேரம் கடத்தும் உத்தி இனி செயல்படாது. கடந்த காலத்தில் பல விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டும், எந்த ஒரு குற்றவாளியும் நீதிக்கு உட்படுத்தப்படாததே இதற்கான சான்றாகும்.

எனவே, வரவிருக்கும் 60ஆவது அமர்வில் நிறைவேற்றப்படவுள்ள தீர்மானம் ஒரு திருப்புமுனையாக இருக்க வேண்டும். தமிழ் மக்களின் வரலாற்று அநீதிகளுக்கு நீதியை வழங்கும் வகையிலும், எதிர்காலத்தில் மீண்டும் அத்தகைய வன்முறை நிகழாமல் தடுக்கும்வகையிலும் அந்தத் தீர்மானம் இருக்க வேண்டும்.

தமிழ் தேசியக் கேள்வி வெறும் அரசியல் பிரச்சினை அல்ல; அது நீதியும் மனிதாபிமானமும் சார்ந்த பிரச்சினை. தமிழ் மக்களின் கோரிக்கைகள் உலகின் கவனத்திற்கு மீண்டும் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இப்போது ஐ.நா. மனித உரிமைகள் சபையும், சர்வதேச சமுதாயமும் வெறும் கண்டனங்கள், அறிக்கைகள் மட்டுமல்லாது, உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவது மட்டுமல்ல, அது இலங்கையின் நிலையான அமைதிக்கும், நல்லிணக்கத்திற்கும் அடித்தளம் அமைக்கும். நீதியின்றி சமாதானமில்லை என்பதை உலகமும் அரசும் நினைவில் கொள்ள வேண்டிய தருணம் இதுவே.

# பட்டங்களால் விபத்து நடப்பதாக வான்படையினர் எச்சரிக்கை

பட்டங்கள் பறக்க விடப்படும் போது ஏற்படும் விமான விபத்துகள் குறித்து விமானப்படை எச்சரிக்கை விடுத்துள்ளது, தற்போது பட்டங்கள் பறக்க விடப்படும் பருவ காலமாகும். அதனை அடிப்படையாகக் கொண்டு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விமானப்படை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விமான ஓடுபாதைகளுக்கு அருகில் பட்டம் பறக்கவிடப் படுவது மிகவும் ஆபத்தான விடயமாகும். விமான ஓடுபாதைகளுக்கு அருகில் பட்டங்கள் பறக்கவிடுவது உலகெங்கிலும் உள்ள விமான விபத்துகளுக்கு ஒரு பிரதான காரணமாகும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இது விமானம் பறப்பதற்கு நேரடித் தடையாக இருக்கும்.

நாட்டில், கட்டுநாயக்க, இரத்மலானை, ஹிங்குராக்கொட, சீன விரிகுடா, பலாலி, கட்டுகுருந்த, கொக்கல, வவுனியா, வீரவில மற்றும் மத்தள போன்ற பகுதிகளிலும் பட்டம் பறக்கவிடுவது மிகவும் ஆபத்தானது. இது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுவது அத்தியாவசியமானதாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திடீர் இறப்பு விசாரணை சேவையை இலஞ்சம் அற்றதாக்க நடவடிக்கை

## நீதி அமைச்சர் அறிவிப்பு

திடீர் இறப்பு விசாரணையாளர்கள் தங்களின் தொழில் கௌரவத்துடன் மற்றவர்களின் மதம் மற்றும் கலாசாரத்தின் பெறுமதி பாதுகாக்கப்படும் வகையில் செயற்படவேண்டும். இலஞ்சமற்ற திடீர் இறப்புவிசாரணை சேவை ஒன்றை ஏற்படுத்துவதற்கான முறை ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

1979ஆம் ஆண்டு 15ஆம் இலக்க குற்றவியல் வழக்கு சட்டத்தின் 108ஆம் உறுப்புரையில் நீதி அமைச்சருக்கு சாட்டப்பட்டிருக்கும் அதிகாரங்களின் பிரகாரம், பல மாவட்டங்களிலும் வெற்றிடமாகி இருக்கும் திடீர் இறப்பு விசாரணையாளர்கள் 23 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நீதி அமைச்சில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

திடீர் இறப்பு விசாரணை சேவையை கௌரவமான சேவையாகக் கருதிச் செயற்பட வேண்டும். மக்களின் திட்டல் கேட்காத எந்தச் சேவையும் இந்த நாட்டில் இல்லை. வீண் விரயம். மோசடி மற்றும் ஊழல், மக்களின் உணர்வுகளுக்கு செவிசாய்க்காமல் இருப்பது இதற்கு காரணமாகும்.

மீண்டும் இந்த நாட்டின் நீதிமன்றத்தின் மீதும் சட்டமா அதிபரின் மீதும் அமைச்சுக்களின் மீதும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் பொறுப்பு இந்த ஆளும்தரப்புக்கு இருக்கிறது. அதற்காக அர்ப்பணிக்க வேண்டி இருக்கிறது. திடீர் இறப்பு விசாரணை பதவியின் மதிப்பை பாதுகாத்துக்கொள்வது உங்களின் பொறுப்பு மற்றும் கடமை என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரிகளின் சேவைக்கு வழங்கப்படும் பணம் போதுமானதாக இல்லை. அதுதொடர்பில் கவனம் செலுத்தி இருக்கிறோம். ஒருசில திடீர் இறப்பு விசாரணை அதிகாரிகள் இலஞ்சம் பெற்றுக்கொள்வதாக முறைப்பாடு கிடைத்திருக்கிறது. ஒருசிலர் தங்களின் உறவினரின் சடலத்தை விரைவாக பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக பணம் வழங்குகின்றனர். ஒருவர் இறந்தால் அவரின் உறவினர்களின் கவலையை உணர்ந்து செயற்பட வேண்டும்.

உண்மையான சமூக சேவையாக செயற்படுவதன் மூலம் உங்களின் தொழில் மதிப்பை பாதுகாத்துக்கொள்ள முடியும். இலஞ்சம் பெற்றுக்கொள்ளாமல் திடீர் இறப்பு விசாரணை சேவை ஒன்றை ஏற்படுத்துவதற்கு முறை ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். திடீர் இறப்பு விசாரணையாளர்கள் தங்களின் தொழில் கௌரவத்துடன் மற்றவர்களின் மதம் மற்றும் கலாசாரத்தின் பெறுமதி பாதுகாக்கப்படும் வகையில் செயற்பட வேண்டும்.

நாடு முழுவதும் 170 திடீர் இறப்பு விசாரணை பதவி வெற்றிடமாகி உள்ளது. அந்த வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்போம். இந்த நாடு அரசியல்வாதிகளுக்கு உரித்தான நாடு அல்ல. இந்த நாடு மக்களுக்கே உரித்தானது. அதனால் தங்களின் சேவையை உணர்வுடன் மேற்கொள்ளும்போது முறையான சேவையை வழங்க முடியுமாகிறது. பிரதி உபகாரங்கள் இல்லாமல் மக்கள் சேவையாக இறப்பு விசாரணையாளர்கள் மேற்கொள்ளும் சேவையை மதிக்கிறோம் என்றார்.

# அரசியல் தலையீட்டிலிருந்து பொலிஸாரை விடுவித்ததால் பெரும் குற்றவாளிகள் கைது

## இப்படி விளக்கமளிக்கிறார் ஆனந்த விஜேபால எம்.பி.

தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் குற்றவாளிகளை ஆதரித்து அவர்களுக்கு அடைக்கலம் வழங்கினர். இதன் காரணமாகவே இந்த நாட்டில் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் தலைதூக்கின. ஆனால் தற்போது நாட்டில் சட்டத்தை மிஞ்சி எவருக்கும் அதிகாரமில்லை. பொலிஸ் தரப்பை அரசியலில் இருந்து விடுவித்தமையாலேயே கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட குற்றவாளிகளை கைது செய்ய முடிந்துள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த விஜேயபால தெரிவித்தார்.

திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் கெஹெல்பத்தர பத்மே பெக்கோ சமன் கொமாண்டோ சலிந்த உள்ளிட்டோர் 6 பேர் இந்தோனேசியாவில் புதன்கிழமை கைது செய்யப்பட்டிருந்தனர்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகள் குழுவொன்று இந்தோனேசியாவிற்குச் சென்று அந்நாட்டு பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட ஒருங்கிணைந்த விசேட சுற்றிவளைப்பில் அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில் தெளிவுப்படுத்தும் விசேட செய்தியாளர்கள் சந்திப்பொன்று நேற்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேயபால தலைமையில் அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. அங்கு அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் கெஹெல்பத்தர பத்மே, பெக்கோ சமன், கொமாண்டோ சலிந்த உள்ளிட்ட 6 பேர் இந்தோனேசியாவில் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சுற்றிவளைப்பு 7 நாட்களாக முன்னெடுக்கப்பட்டது. இந்தோனேஷியா பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் இணைந்து இந்த ஒருங்கிணைந்த விசேட சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர். எமது நாட்டின் புலனாய்வுப்பிரிவு உள்ளிட்ட பலரது ஒத்துழைப்பும் இதற்கு கிடைக்கப்பெற்றது. அத்துடன் சர்வதேச பொலிஸாரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். இதற்கமையவே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

தற்போது பொலிஸார் அரசியல் தலையீட்டில் இருந்து விடுப்பட்டு சுதந்திரமாகச் செயற்படுகின்றனர். அவர்களுக்குச் சுயாதீனமாக செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை தற்போதைய ஆளும்தரப்பு ஏற்படுத்திக்கொடுத்துள்ளது. இதனாலேயே கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட குற்றவாளிகளைக் கைதுசெய்ய முடிந்துள்ளது. பொலிஸார் சுதந்திரமாகச் செயற்படுவதன் பிரதிபலனை எம்மால் தற்போது அடைந்துக்கொள்ள முடிந்துள்ளது.

கடந்த காலங்களில் திட்டமிட்ட குற்றச் செயல்கள் தொடர்பில் சமூகத்தில் பல விமர்சனங்கள் எழுந்தன. அரசியல் வாதிகளின் செயற்பாடுகள் மற்றும் குற்றவாளிகளுக்கு அவர்கள் வழங்கிய ஆதரவு காரணமாகவே நாட்டில் திட்டமிட்ட குற்றச் செயல்கள் அதிகரித்தன. அதில் எந்த வித சந்தேகமும் கிடையாது. தமது அரசியல் நோக்கத்துக்காகவே அவர்கள் திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய தரப்பினருக்கு ஆதரவு வழங்கினர். தமது இருப்பை தக்கவைத்துக்கொள்ளவும் குற்றவாளிகளைப் போசித்து அடைக்கலம் வழங்கினர்.

இதன் காரணமாகவே இந்த நாட்டில் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் தலைதூக்கின.

தற்போது நாம் பாதாள உலக்குழுக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையிலான தொடர்புகளை கண்டறிந்துள்ளோம். விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம். இது தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு எதிர்காலத்தில் பல தகவல்களை வெளிப்படுத்துவோம்.

நாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவோம். தற்போது கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களை எதிர்வரும் நாட்களில் நாட்டுக்கு அழைத்து வந்து அவர்களுக்கு எதிராக மேலதிக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

பாதாள உலக்குழுக்களின் உறுப்பினர்களாகவோ, அரசியல்வாதிகளாகவோ, அரச அதிகாரிகளாகவோ அல்லது பொலிஸ் உத்தியோகர்களாகவோ இருக்கலாம் சட்டத்தின் முன் அனைவரும் சமம். தவறு இழைத்தால் பாரபட்சம் இன்றி அனைவர் மீதும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

இந்நாட்டு மக்கள் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் வாழக்கூடிய வளமான நாட்டை உருவாக்குவோம் என்றார்.

# தீவுக்குள்ளே ஒரு தீபகற்பம்

**என். சத்திய மூர்த்தி**

கவிஞர் வாலி ஒரு கேள்வி கேட்பார்: 'எறும்பின் வாயை விட சிறியது எது?' அதற்கு பதிலையும் அவரே கூறி சென்றிருக்கிறார்: 'எறும்பின் வாயை விட சிறியது, அது சாப்பிடும் உணவு.' தற்போது முன்னாள் அரசுத தலைவர் ரணில் விக்கிரமசிங்கே கைது குறித்த தமிழர் தரப்புகளின் நிலைபாடு, வாலியின் அந்தப் புதிரைதான் நினைவுறுத்துகிறது.

இலங்கை என்ற நாடே ஒரு குட்டி தீவு. அதில் யாழ்பாணம் ஒரு தீபகற்பம். ஆங்கிலத்தில் கூறுவது போல் 'ஐலேண்ட் மெண்டாலிட்டி' மற்றும் 'பெனின்சுலா சைக்காலஜி' என்ற இரு வேறு மனப்பாங்கு உடன் பிறந்தவை. எறும்பு, அதன் சிறிய உருவத்தைவிட சிறிதானது அதன் உணவு என்று பாகுபாடு செய்து, வாழ்வதும் அரசியல் செய்வதும் இங்கு வாடிக்கை ஆகிவிட்டது. அணுவை துளைத்து, என்று பழமொழி சொல்வார்களே, அதைப்போல.

நாட்டையே தென்னிலங்கை, வட இலங்கை என்று மனத்தளவில் பிரித்தது போதாது என்று, தேசிய அளவிலான பிரச்சினைகளைக்கூட இனப்பிரச்சினையின் ஊடாக மட்டுமே பார்க்கும் தமிழரின் நிலைபாடு, அவர்களின் தீபகற்ப மனவோட்டத்தையே நினைவுறுத்துகிறது. இல்லையென்று சொல்லாமல், தென்னிலங்கையில் 'சிங்கள பேரினவாதம்' தலைவிரித்தாடுகிறது என்பது உண்மை. ஆனால், அதற்கு எதிர்பதமாகவே, 'தமிழ் தேசியம்' என்ற வாதத்தையும் தொடர்ந்து ஆயுதத்தையும் கையிலெடுத்த பின், இன்னமும் அவலை நினைத்து உரலை இடித்துக்கொண்டு இருப்பதா அரசியல் ஆளுமை?

## அன்றும் இன்றும்

தற்போதைய பிரச்சினை இதுதான், இவ்வளவுதான். முன்னாள் அரசுத தலைவர் ரணில் விக்கிரமசிங்கேவை ஊழல் குற்றச்சாட்டில், தற்போதைய அரசுத தலைவர் அநுரகுமார தலைமையிலான ஜேவிபி - என்பிபி அரசு கைது செய்தது. அது அரசியல் பழிவாங்கும் செயல் என்று தென்னிலங்கையில் உள்ள அனைத்து எதிர்கட்சிகளும் ஓரணியில் திரண்டுள்ளன. அவர்களில் தமிழ் மொழி பேசி, அதே கலாசாரத்தில் பயணிக்கும் முஸ்லீம் மற்றும் மலையக தமிழ் கட்சிகளும் அடங்கும்.

ஆனால், யாழ் தீபகற்பத்தை மையமாக கொண்டு இயங்கும் இலங்கை தமிழர்களின் பல்வேறு அரசியல் கட்சிகளும், கீறல் விழுந்த 'ரெக்கார்ட்' போல, பழைய பல்லவிகளையே தொடர்ந்து பாடி வருகின்றன. அதாவது, ரணில் ஆறு முறை பிரதமர், பின்னர் அரைகுறையாக அரசுத தலைவராக இருந்த காலகட்டத்தில், இனப்பிரச்சினையை தீர்த்துவைக்க எந்த முன்னெடுப்புகளையும் செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டி உள்ளன.

இனப்பிரச்சினை குறித்த ரணிலின் இந்த அணுகுமுறையை காரணம் காட்டி, தென்னிலங்கை எதிர்கட்சிகளின் ஒருமித்த குரலோடு, தங்களது குரலையும் பதிவு செய்வதில்லை என்று இங்குள்ள தமிழ் கட்சிகள் அறிவித்தன. ஆனால் அந்த அறிவிப்புகள்கூட, தனித்தனியாக வெளியிடப்பட்டன. இதுவும், அவர்களிடையேயான ஒற்றுமையின்மையையே வெளிப்படுத்தின.

அந்த விதத்தில், ரணில், அரசுடனோ, அரச தலைமையுடனோ முட்டிமோதுவது இது இரண்டாவது முறை. முன்பு அவர் பிரதமராக பதவி வகித்த போதே, அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேனா, அவரை அதிரடியாகப் பதவி நீக்கம் செய்துவிட்டு, தனது முன்னாள் 'பாஸ் கம் எதிரி' மஹிந்த ராஜபக்சவை அந்தப் பதவிக்கு நியமனம் செய்து பதவி பிரமாணமும் செய்து வைத்தார்.

ஆனால் உச்ச நீதிமன்றம் இந்த விடயத்தில் தலையிட்டு, ரணிலின் பதவி நீக்கம் அரசியல்சாசன விதிகளின்படி செல்லாது என்று முடிவு செய்தது. அதனைத் தொடர்ந்து அதே சிறிசேனா, அதே ரணிலை அதே பதவிக்கு பதவியேற்பு உறுதியுரை செய்து வைத்தார்.

## சுவர் இருந்தால்தான்

அந்தக் காலகட்டத்தில், ரணிலுக்கான ஆதரவில் தமிழ் அரசியல் தலைமைகள் பிளவுபட்டு நின்றன. குறிப்பாக, மூன்று கட்சிகளை உள்ளடக்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரான காலம்சென்ற சம்மந்தன், ரணிலுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தார். அவரைப் பொறுத்தவரை, இனப்பிரச்சினைக்கு அப்பாலும், நாட்டின் அரசியல்



நெறிமுறைகள் மற்றும் அரச நீதி காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

இன்னும் சொல்லப்போனால், சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்பது சம்மந்தனின் கருத்தாக இருந்தது. அதாவது, நாட்டில் ஜனநாயகம் உயிரோடு இருந்தால் மட்டுமே, இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து நினைத்துகூடப் பார்க்கமுடியும் என்பது அவருடைய வாதமாக இருந்தது.

என்றாலும், அந்த ஐந்து ஆண்டுகளில், சிறிசேனா-ரணில் இரட்டையர் தலைமையிலும் சரி, பின்னர் தாங்கள் ஆதரவு நல்கிய ரணில் அரசின் கீழும் சரி, சம்மந்தனும் கூட்டமைப்பும் தமிழ் மக்களுக்கான தீர்வு குறித்து விரலைக்கூட அசைக்கவில்லை என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. அதில் சிறிது உண்மையும் இருந்தது. இன்னமும் இருக்கிறது.



இன்னும் சொல்லப்போனால், இதன் காரணமாகவும்கூட, புலம்பெயர்ந்தோரின் ஊதுகுழலாக இங்கு செயல்படும் சில சமூக - அரசியல் தரப்புகள், சம்மந்தனுக்கு, வழமையான 'துரோகி' பட்டம் கட்டி, அவரை இறப்பிற்குப் பின்னரும் அவமதித்தது. தற்போது, சம்மந்தனின் அரசியல் வாரிசாக கருதப்படும் சுமந்திரனுக்கும் அவர்கள் அந்தப் பட்டத்தை தொடர்ந்து சூட்டி அழகு பார்த்து வருகிறார்கள்.

அதன் காரணமாகவோ என்னவோ, வட மாகாண முதல்வர் பதவியை குறிவைத்திருக்கும் சுமந்திரன் ரணில் விடயத்தில், அடக்கியே வாசித்தார் என்றே எண்ணத் தோன்றுகிறது. இது, ரணில் அரசுத் தலைவராக இருந்தபோது, இருவருக்கும் இடையே தோன்றியிருந்த மனவருத்ததின் வெளிப்பாடும்கூட எனலாம். அந்த மனவருத்தத்தின் காரணம் இன்னமும் புரியாத புதிராகவே இருந்து வருகிறது.

## எதில் சேர்த்தி?

இந்தப் பின்னணியில், ரணில் கைது விடயத்தில் மௌனம் காத்துவரும் தமிழ் தரப்புகள், இதன் மூலம் ஆளும் கூட்டணிக்குச் சொல்லும் செய்தி என்ன? ரணில் கைது செய்யப்பட்டதை எதிர்க்கவில்லை என்றால், அது அரசையும் ஆளும் கூட்டணியையும் ஆதரிப்பதற்குச் சமமாக இருக்காதா? அதாவது, இந்தப் பிரச்சினை நாடாளுமன்றத்தில் விவாதப் பொருளானால், அப்போது, வடக்கு-கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், எந்தப் பக்கத்தில் நின்று விவாதிப்பார்கள்?

அல்லது, சம்மந்தன் போன்று, விவாதப்பொருளுக்கு சம்மந்தமே இல்லாமல், இனப்பிரச்சினை குறித்து மட்டுமே பேசுவார்களா? வெறும் வாயை மெல்லுபவர்களுக்கு அவல் கிடைத்தது போல் அவர்களுக்கு இப்போது இருக்கவே இருக்கிறது, செம்மணி புதைகுழி விடயமும், எதிர்வரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டமும்..

இந்த விடயங்கள் குறித்துத்தானே, தற்போது, ஏட்டிக்கு போட்டியாக ஜெனிவாவிற்கு கடிதங்களை ஏவுகணைகள் போல் அனுப்பிவருகிறார்கள். என்றாலும், அவர்களில் கஜேந்திரகுமார் அணியினர் தவிர்த்து மற்றுள்ள அனைவரும் ஓரணியில் திரண்டு வருவது போல் தோன்றுகிறது. வரவேற்க்கப்படவேண்டிய விடயம். ஆனால், மாகாணசபை தேர்தல் அடுத்த ஆண்டும் இல்லை என்ற அறிவிப்பு வந்தால், அவர்கள் மீண்டும் ஒரு முறை பிரிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஒரு விடயம். வழமை போல் அல்லாது, மனித உரிமைகள் பேரவைக் கூட்டங்களுக்கு முன்னர் கொழும்புவில் உள்ள மேலை நாடு தூதுராலயங்களைத் தமிழ் தலைவர்கள் ஒரு சுற்றுச் சுற்றி வருவார்கள். ஆனால் இந்தமுறை அவ்வாறு தரிசிக்கச் சென்றதாக இதுவரை செய்திகள் இல்லை. இது எதில் சேர்த்தி என்றும் தெரியவில்லை.

## இருட்டை கொண்டு

ரணில் விடயத்தில் தமிழர் தரப்புகள் அரசை ஆதரிப்பது போல் செயல்படுவது, அடுத்து வரும் மாகாண சபை தேர்தல்களில் எந்தவித தாக்கத்தை ஏற்படுத்தும்? குறிப்பாக வடக்கு மாகாண மக்கள் படித்தவர்கள், அறிவாளிகள் என்றெல்லாம் கருதப்பட்டாலும், இனப்போர் முடிந்த காலம் தொடங்கி, அத்தகைய எண்ணவோட்டங்கள் எல்லாம் செல்லாக் காசாகிவிட்டன.

அதாவது, சிறந்த தொண்டர் கட்டமைப்பு கொண்ட ஆளும் தரப்பு, தங்களுடைய வழமையான பரப்புரை உத்திகளை இங்கேயும் நடைமுறைப்படுத்தினால், அதில் ஓரளவு வெற்றியும் பெற்றால், அதன் அரசியல் நட்டம் யாருக்கு? இப்போதே, முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு, ஆளும் கட்சி அமைச்சர்களும் பிற தலைவர்களும் வடக்கு நோக்கி பயணப்பட்டு வருகின்றனர்.

அவாகளில் குறிப்பாக, பிரதமர் ஹரிணி, போக்குவரத்து துறை அமைச்சர் பிமல் ரத்நாயகே ஆகியோர் இங்கு அடிக்கடி வந்து சென்ற வண்ணம் உள்ளனர். வடக்கே, பாலாலி விமான நிலையத்தை படிப்படியாக சர்வதேசமயப்படுத்த இருப்பதாகவும் அமைச்சர் பிமல் ரத்னாயக்கே கூறிச் சென்றார். பிரதமர் ஹரிணியோ. பல சிங்களத் தலைவர்களையும் போல் இல்லாமல், நல்லூர் கந்தன் கோவிலுக்கு, வருடாந்த திருவிழா சமயத்தில் சென்று பிரார்த்தனை வேறு செய்தார்.

இவர்கள் தவிர, கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் சந்திரசேகரன், இங்கேயே 'டென்ட்' அடித்துள்ளார். இதுவே முன்பு அதேதுறையில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவிற்கும் பொருந்தும். இருவருமே வன்முறை அரசியலில் இருந்து மடை மாறி மிதவாத அரசியலுக்கு திரும்பி வந்தவர்கள் என்பதும் உண்மை.

பெருவாரியான தமிழ் அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில், இவர்கள் இருவருமே தமிழர் நலனுக்கு எதிரானவர்கள். ஆனால், அதே தமிழ் கட்சிகள் தற்போது, அரசிற்கான தங்களது எதிர்ப்பை அரசியல் ரீதியாக வெளிப்படுத்த வாய்ப்பு கிடைத்தும் பயன்படுத்தாதவர்கள். பின்னர் வாய்ஜாலம் பேசுவது, இருட்டை கொண்டு ஓட்டை அடைப்பதற்கான முயற்சி மட்டுமே.

## தெரியாத விடயம்

இவற்றிற்கு அப்பால் சென்று, செம்மணிப் புதைகுழி விடயத்தில், உள்நாட்டுப் பொறிமுறைகளைக் கொண்டு, நியாயமான விசாரணை மேற்கொள்ள இருப்பதாக, அரசு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தாலே, அதன் தேர்தல்கால அரசியல் விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்று கணிக்க முடியாது. முன்பு கிருஷாந்தி விவகாரத்தில் அப்போதைய அரசு எடுத்த முன்னெடுப்புகள், அதன் காரணமாக, அனைவரும் இல்லையென்றாலும் அந்தப் படுகொலையில் சம்மந்தப்பட்ட பல குற்றவாளிகளுக்கும் நீதிமன்றம் மூலம் உரிய தண்டனை வாங்கிக் கொடுத்தது எல்லாம், தற்போதைய தமிழ் தலைமுறையினருக்குத் தெரியாத விடயம். தெரிவிக்கப்படாத விடயமும்கூட.

தேர்தல் காலத்தில், அவற்றை இந்த அரசு பிரகடனப்படுத்தும். இல்லை, இல்லை, செம்மணி புதைகுழி விவகாரத்தை, அன்றாடம் அலசும் தமிழ் ஊடகங்களே அந்த பணியை செய்து வருகிறார்கள்.

இது போதாது என்று, அநுர அரசின் ஊழல் விசாரணைகள் வடக்கு நோக்கியும் பாயலாம். அதனை எதிர்பார்த்து, இப்போதே இங்கு வாய்மூடி மௌனியாகும் அரசியல்வாதிகள் எத்தனை பேரோ?

இவ்வாறெல்லாம் நடந்தேறி விட்டால், மாறிவரும் சமூக சூழலில், தற்போதைய தலைமுறை தமிழ் வாக்காளர்களின் மனநிலையை இன்னமும் அறிந்த உணராத மெத்த அறிந்த தமிழ் அரசியல் தலைமைகள், கடந்த வருட நாடாளுமன்ற தேர்தலை போலவே, மாகண சபை தேர்தலிலும் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது இடங்களுக்கு போட்டியிடுவது தவிர்க்க முடியாததாகிவிடும். அதன் பின்னர் மீண்டும் 'உன்னாலே நான் கெட்டேன், என்னாலேயும் நானே கெட்டேன்' என்று ஒப்பாரி வைத்து தங்களுக்கு தாங்களே சமாதானம் கூறிக் கொள்ளலாம். அவ்வளவுதான்.

காலைக்கதிர் Kalaikkathir

## ரணில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஷானி அபேசேகர மூத்த பொலிஸ் அதிகாரி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவரது இறுதிப் பதவி காலத்தில் எதிர்கொண்ட சில சம்பவங்களால் தேசிய மக்கள் சக்தியின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் ஒரு சாதாரண நபராக மாறியிருப்பது கவலைக்குரியது.

இதன் காரணமாகவே பொலிஸ் திணைக்களத்தின் சுயாதீனத்தன்மையும் இழக்கப்பட்டுள்ளது. அமைச்சர் வசந்த சமரசிங்க தொடர்பில் அளிக்கப்பட்ட முறைப்பாடு குறித்த விசாரணைகள் நிறைவடைய முன்னரே அது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களம அறிவித்துள்ளது. ஆனால் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வழக்கில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. விசாரணைகள் நிறைவு செய்யப்பட முன்னரே அவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இது ரணில் விக்கிரமசிங்க என்ற தனிநபருடன் தொடர்புடைய காரணியல்ல. நாட்டில் சட்டத்தின் ஆட்சிக்கு விடுக்கப்பட்டுள்ள சவால் ஆகும். வசந்த சமரசிங்கவுக்கு ஒரு விதத்திலும், முன்னாள் அரசுத் தலைவர் ரணிலுக்கு இன்னொரு விதத்திலும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் இது குறித்து முறையான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். பொலிஸ் ஆணைக்குழுவும் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். இது மிகவும் பாரதூரமான நிலைமையாகும் என்றார்.

## உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் நேர்மைப் பண்பை ஊக்குவிக்கும் நேர்மையான தேசத்தை நோக்கி ' தேசிய நிகழ்ச்சித் தொடரின் முதலாவது நிகழ்வில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் எதிர்கால செயற்பாடுகள் பற்றி நாட்டு மக்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டும். ஊழல்வாதிகளை பிடித்து அவர்களை சிறைக்கு அனுப்பினால் மாத்திரம் ஊழலை இல்லாதொழிக்க முடியாது.

பிரச்சினை எங்குள்ளது என்பதை விளங்கிக்கொண்டுள்ளோம். முழு நாட்டிலும் குறிப்பாக அரச சேவை மற்றும் அரச நிறுவனங்களில் இலஞ்சம் மற்றும் ஊழல் என்பது புற்றுநோய் போல் தீவிரமாக பரவியுள்ளது. ஆணைக்குழுவின் பணிப்பாளராக பதிவியேற்றதன் பின்னரே அதன் பாரதூரத்தை விளங்கிக்கொண்டேன்.

நாட்டு மக்கள் அனைவரும் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக குரலெழுப்புகிறார்கள். இருப்பினும் ஊழலுக்கு எதிராக குரல் கொடுப்பவர்கள்தான் ஊழலுடன் உள்ளார்கள் என்பதையும் அடையாளப்படுத்திக் கொண்டோம். முறைமை மாற்றம் என்று குறிப்பிட்டாலும் முறைமை தமது கைகளுக்கு வந்ததன் பின்னர் கூரையின் மீது ஏறுவதாக பிரதி அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இதுவே நான் புரிந்துக்கொண்ட உண்மை.

ஊழல் பற்றி அனைவரும் பேசினாலும் தம்மிடம் வந்ததன் பின்னர் தன்னை தவிர்த்து ஏனையவர்களை பிடிக்குமாறு குறிப்பிடுகிறார்கள். ஊழல்வாதிகளை கைது செய்து சிறைக்கு அனுப்புவது மாத்திரமல்ல அதற்கு அப்பாற்பட்டு கல்வி முறைமையிலும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக ஒன்றுப்படுமாறு ஒட்டுமொத்த மக்களுக்கும் அறிவுறுத்த வேண்டும். எமக்கு பொறுப்புக்களை வழங்கியதன் பின்னர் தமக்கு எவ்வித பொறுப்புமில்லை என்று மக்கள் கருதுகிறார்கள். ஊழலுக்கு எதிராக செயற்படுவது ஒட்டுமொத்த மக்களின் சமூக பணி என்று குறிப்பிடும் பொறுப்பு எமக்கு உண்டு.

உள்ளூராட்சி சபை நிர்வாகத்தில் பாரியளவிலான இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகள் இடம்பெறுகின்றன. பொதுமக்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு செல்லும் போது அவர்களுக்கான சேவை வழங்கல் தாமதப்படுத்தப்படுகிறது. இதனைத் தொடர்ந்து இலஞ்சம் கோரப்படுகிறது. இவற்றை அடையாளப்படுத்தியுள்ளோம்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் ஊழலற்ற நிர்வாக கட்டமைப்பை உள்ளூராட்சி மன்றங்களில் அவர்கள் ஏற்படுத்த வேண்டும். அது அவர்களின் பொறுப்பு. அதிகாரிகள் மக்கள் பிரதிநிதிகளை தவறாக வழித்துவதும் இடம்பெறும். இதனை மக்கள் பிரதிநிதிகள் சிலநேரம் அறியாமல் இருக்கலாம். ஆகவே சகல உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்கும் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் தெளிவூட்டப்படும். இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட 6 பேர் இந்தோனேசியாவில் புதன்கிழமை கைது செய்யப்பட்டமை தொடர்பில் தெளிவுப்படுத்தும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன்போதே பொலிஸ் மா அதிபர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எம்மால் தற்போது தடையின்றி சட்டத்தை நடைமுறைப்படுத்த முடிகின்றது. காரணம் அரசியல் தலையீடும் அழுத்தமும் இன்றி பொலிஸார் செயற்படுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களுக்கு எதிராக எடுக்க வேண்டிய மேலதிகச் சட்ட நடவடிக்கை தொடர்பில் எமக்கு ஆலோசனைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே அவர்களுக்கு எதிராக எம்மால் செயற்பட முடியும். அதற்கான நடவடிக்கைகளை நாம் ஆரம்பித்துள்ளோம்.

நாட்டில் திட்டமிட்ட குற்றச்செயல்களை ஒடுக்கவேண்டுமானால் சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவேண்டும். எனவே நாம் சர்வதேச தூதரகங்கள் மற்றும் அதன் தூதுவர்களுடன் சிறந்த உறவை மேம்படுத்தி வருகிறோம். தற்போது எமது பொலிஸ் திணைக்களமும் அதற்கான நம்பிக்கை கட்டியெழுப்பி வருகிறது. பொலிஸ் திணைக்களம் சர்வதேசத்துடன் சிறந்த பிணைப்பை உருவாக்கி வருகிறது. ஆனால் பொலிஸ் திணைக்களம் தொடர்பில் பொதுமக்களுக்கு நூறு வீதம் நன்மை ஏற்பட:டுள்ளதா என்பது தொடர்பில் எனக்கு தெரியாது. எனினும் அந்த நம்பிக்கையை நாம் கட்டம் கட்டமாக ஏற்படுத்தி வருகிறோம்.

எமது அதிகாரிகள் தவறிழைத்தாலும் அவர்களுக்கு எதிராக சட்டட நடவடிக்கை எடுப்போம். அவர்களுக்கு தண்டனையை குறைக்க நாம் செயற்பட மாட்டோம். நாம் நியாயமாக செயற்படுகிறோம். எமது அண்மைகால செயற்பாடுகளை அவதானிக்கும் போது அதனை மக்களால் அறிந்துகொள்ள முடியும். தற்போது பொலிஸாருக்கு கிடைத்துள்ள சுதந்திரம் மற்றும் சர்வதேசத்திடம் எமக்கு கிடைத்துள்ள நம்பிக்கையினாலும் எம்மால் இந்த செயற்பாடுகளை முன்னெடுக்க முடிந்துள்ளது என்றார்.

## புதிய பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் மாலை நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சில் கூடியது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த சட்டமூலத்துக்கு கொண்டுவரப்படும் திருத்தங்கள் தொடர்பில் விமர்சன ரீதியில் இரண்டாவது தடவையாகவும் ஆராயப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, நாட்டில் நடைமுறையில் உள்ள 1979 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை ரத்து செய்து, புதிய சட்டத்தை வரைபு செய்வதற்காக அமைச்சரவையின் அனுமதியுடன் இந்த நிபுணர் குழுவை நியமித்தார்.

புதிய சட்டமூலம் ஒன்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் நவீன உலகளாவிய பயங்கரவாத சவால்களுக்கு முகம்கொடுத்தல், உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் தனிநபர்களின் மனித உரிமைகளை நிலைநிறுத்துவது மற்றும் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளுக்கு இணங்குவது இந்த சட்ட சட்டமூலத்தை அறிமுகப்படுத்துவதன் நோக்கமாகும்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# கொலைகளின் பின்னால் மறைமுக சதி கட்டுப்படுத்த அநுர கடும் நடவடிக்கை

## இதைச் சொல்கிறார் பாதுகாப்பு அமைச்சு செயலர்

இந்த நாட்டில் இடம்பெறும் கொலைச் சம்பவங்கள் தனிப்பட்ட விடயம் அல்ல. அதன் பின்னணியில் மறைமுக சக்திகள் உள்ளன. எனவே குற்றச் செயல்களை கட்டுப்படுத்த அரசுத் தலைவர் அநுரகுமார நடவடிக்கை எடுத்து வருகிறார் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் கெஹெல்பத்தர பத்மே, பெக்கோ சமன், கொமாண்டோ சலிந்த உள்ளிட்டோர் 6 பேர் இந்தோனேசியாவில் கைது செய்யப் பட்டிருந்தனர்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகள் குழுவொன்று இந்தோனேசியாவிற்கு சென்று அந்நாட்டு பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட ஒருங்கிணைந்த விசேட சுற்றிவளைப்பில் அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குறிப்பாக இந்த நாட்டில் இடம்பெறும் கொலைச்சம்பவங்கள் தனிப்பட்ட விடயம் அல்ல. அதன் பின்னணியில் மறைமுக சக்திகள் உள்ளன. எனவே குற்றச்செயல்களை கட்டுப்படுத்த அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க விசேட திட்டமொன்றை வகுத்தார்.

குற்றவாளிகள் தலைமறைவாகி இருப்பதாகக் கூறப்படும் நாடுகளுடன் இருதரப்பு உறவுகளை பலப்படுத்தினார். குறிப்பாக இந்தியா, மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளுடன் அவர் இராஜதந்திர ரீதியாகவும் அந்த நாட்டு புலனாய்வு துறையினருடனும் சிறந்த தொடர்புகளையும் பேணி வந்தார்.

அதன் பிரதிபலனாகவே எமக்கு இந்தத் குற்றவாளிகளை கைது செய்ய முடிந்தது.

அதேபோன்று இந்த நாட்டு பொலிஸாருக்கு சுயாதீனமாக செயற்படுவதற்கான வாய்ப்பு தற்போது ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக குற்றவாளிகளை அடைவது எமக்கு இலகுவாக இருந்தது.

திட்டமிட்ட குற்றச் செயல்கள் தொடர்பில் பார்க்கும் போது கெஹெல்பத்தர பத்மே என்பவர் பொலிஸாருக்கு சவாலாக இருந்தார். பொலிஸ் திணைக்களத்துக்கு அவரை கைது செய்வது சிரமாகவே இருந்தது.

ஆனால் பொலிஸ் மா அதிபரின் வழிகாட்டுதலின் கீழ் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்புடன் அவர்ளை கைது செய்ய முடிந்துள்ளது.

நாட்டில் உள்ள இந்தோனேசிய தூதரகம் எமக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தது. இதற்கமைய இந்த விசேட சுற்றிவளைப்பு பல நாட்களாக முன்னெடுக்கப்பட்டு குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களை நாட்டுக்கு அழைத்து வந்து மேலதிக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# செல்வநாயகபுரம் மருத்துவமனை தாதியர் பற்றாக்குறையால் அவதி

(ஹஸ்பர்)

செல்வநாயகபுரம் பொது மருத்துவமனையானது 'சி'தர (Type C) பிரதேச மருத்துவமனையாகும் . இம்மருத்துவமனை 65,000 மக்களுக்கு சேவையாற்றுகின்றது . தாதியர் இன்மையால் இம்மருத்துவமனை முறையாக செயற்பட முடியாமல் உள்ளது. எனவே, இம்மருத்துவமனைக்கு குறைந்தது 3 தாதியரையாவது நியமிக்க ஆவன செய்ய வேண்டும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் வலியுறுத்தியுள்ளார்.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று மாவட்ட செயலக மண்டபத்தில் இடம் பெற்றது இதன்போது அவர் இதனை வலியுறுத்தினார்.

திரியாய் தொடக்க மருத்துவமனைக்கு மிக நீண்ட காலமாக மருத்துவரும், சிற்றூழியர்களும் இல்லாத நிலை காணப்படுகின்றது. இவர்களையும் நியமித்து இந்த மருத்துவமனைகளை முறையாகச் செயற்பட ஆவன செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# ஆயுர்வேத மருத்துவமனைக்கு மங்களகம பகுதியில் அடிக்கல்

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண 2025 வருடாந்த நிதி ஒதுக்கீடுகளின் கீழ் 18 மில்லியன் ரூபா செலவில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மங்களகம பகுதியில் மாகாண சுதேச மருத்துவத் துறையின் கீழ் மங்களகம ஆயுர்வேத மருத்துவ மருந்தகத்தைநிர்மாணிப்பதற்கான புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.



நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, ஆளுநரின் செயளாலர் அருள் ராஜ், மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள பணிப்பாளர் மருத்துவர் நபீல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# காரைதீவு – மண்டூர் பாதயாத்திரை நாளை

(சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற 'சின்னக் கதிர்காமம்' என அழைக்கப்படும் மண்டூர் ஸ்ரீ முருகன் ஆலயத்துக்கான வருடாந்த பாதயாத்திரை நாளை காரைதீவிலிருந்து நடைபெற இருக்கிறது .

காரைதீவில் மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து அதிகாலை நான்கு மணிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் பாதயாத்திரை ஆரம்பமாகும்.

காரைதீவு இந்து சமய விருத்திச்சங்கம் இந்த பாரிய பாதயாத்திரையை வருடாந்தம் நடத்தி வருகிறது.

காரைதீவிலிருந்து அதிகாலை 4. 00 மணிக்கு புறப்படும் பாதயாத்திரை கல்முனை, நற்பிட்டிமுனை , சேனைக்குடியிருப்பு, கிட்டங்கி, நாவிதன்வெளி, வேப்பையடி, தம்பலவத்தை ஊடாக மண்டூரைச் சென்றடையும்.

தம்பலவத்தையில் பிரபல சட்டத்தரணி நடராசா சிவரஞ்சித்தின் அன்னதான நிகழ்வு வழமைபோல் இம் முறையும் இடம்பெறவிருக்கிறது.

வரலாற்று பிரசித்தி பெற்ற 'சின்னக் கதிர்காமம்' என அழைக்கப்படும் மண்டூர் ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 18 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. எதிர்வரும் செப்டம்பர் 07ஆம் தேதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைய விருக்கிறது குறிப்பிடத்தக்கது.

உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# அரசகேசரி மந்திரி அமைத்த பிள்ளையார் கோயில்

அது இடபக்கொடி பறக்க, ஆர்ய சக்கரவர்த்தியான பரராஜசேகர மஹாராஜா நல்லூரைத் தலைநகராகக் கொண்டு யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த காலம்.

ராஜாவின் விருப்பப்படி அவரது மருகரும் மஹாமந்திரியுமான அரசகேசரி காளிதாசர் சம்ஸ்கிருதத்தில் செய்த ரகுவம்சத்தை தமிழில் எழுதிக் கொண்டிருந்தான்.

பெரும்புலவனான அரசகேசரி அன்றைய இரவும் விளக்கொளியில் எழுத்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறான்.

ஸ்ராஜ்யம் குருணாதத்தம் பிரதிபத்யாதிகம் பபௌ
திநாந்தெ நிஹிதம் தேஜஸ் சவித்திரே வஹா...

என்ற ஸ்லோகத்தை

கனை கழல் வீரனுங் காவ லான்றரு
புனைமணி முடியொடும் பொலிந்து தோன்றினான்
றினகரன் றிவாந்தகா லத்திற் சேர்த்திய
வினவொளி கொடுகன லிலங்கிற் றென்னவே

என்றுமொழிபெயர்த்துகவிதைஎழுதிவிட்டுநிமிர்கிறான். முன்னே அவன் மனைவி மரகதவல்லி நிற்கிறாள்.

'ஸ்வாமி உணவு, உறக்கம் எல்லாவற்றையும் மறந்து இப்படி இருக்கலாமா? இரவு மூன்றாம் சாம அரசவை மணி ஒலித்து விட்டது' என்கிறாள்.

நிலையை உணர்ந்த அரசகேசரி தன் மஞ்சத்துக்கு செல்கிறான். உறங்குகிறான். அதிகாலை நேரம் அழகிய கனவை காண்கிறான்.

கஜவதனமும்கருணைவிழிகளும் கொண்டஆனைமாமுகஜங்கரக்கடவுள் கனவில் காட்சி அருள்கிறார். அக்கடவுள் இன்சுவை நீர் தந்து அரசகேசரியை அருந்த வைக்கிறார்.

விழித்த அரசகேசரி வியக்கிறான். எந்ததொடர்ச்சியுமின்றிவந்தஅக்கனவு அதிசயிக்க வைக்கிறது. என்றாலும் யாரிடமும் ஏதும் சொல்லவில்லை.

மறு நாள் நல்லூரிலிருந்து இராஜவீதி வழியாக தன் குதிரையில் சாலிவாடி புரம் தாண்டி தனித்து பயணிக்கிறான். திடீரென்று மிகக் கடுமையான தாகம்...

என்ன செய்வது? எங்கே தூய நீர் கிடைக்கும்? என்று தேடுகிறான். தேடியவன் ஒரு சுயம்புவான நீர் கிணறை பார்க்கிறான். மகிழ்ந்து நீரெடுத்து அருந்துகிறான். அதன் சுவையில் லயிக்கிறான். திரும்பிப் பார்க்கிறான். சிறிய குடிலில் ஆனை முகக் கடவுள் விக்கிரஹ வடிவில் சிரிக்கிறார்.



கஜானனம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்
உமாஸுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்நேஸ்வர பாத பங்கஜம்

என்றஸ்லோகத்தைச்சொல்லிக்குட்டிக்கும்பிடுகிறான்.

ஸ்லோகம் சொல்வது போல பிள்ளையார் பழரஸம் உண்பது போல இங்கே ரஸமான நீரை தந்து சோகம் தீர்க்கிறாரே? என்று வியக்கிறான்.

நன்னீர் தந்த அந்த நீரவாடீபுரம்/ நீர்வேலி மஹாகணபதிக்கு கோயில் அமைப்பதாக சங்கல்பித்துக் கொள்கிறான். கனவில் கண்டதை எண்ணி எண்ணி ஆனந்தம் கொள்கிறான்..

மஹாராஜாவுக்கு நிகழ்ந்த அதிசயத்தைச் சொல்கிறான். அவரது அனுமதியோடு சிறு கோயில் அமைத்து சுற்றிலும் அக்ரஹாரம், பூஞ்சோலை, வேத – திருமுறை மண்டபங்கள், அறநிலையங்கள் அமைக்கிறான்.

சுபவேளையில்வேதாகமவிதிவழிமஹாகும்பாபிஷேகம் செய்கிறான்.

காலம் ஓடுகிறது. போர்த்துக்கேயர் ஆட்சியில் எல்லாம் அழிவுறுகிறது. ஆனாலும், சைவத்தமிழ் பாதுகாப்பு அரணாக நீர்வேலி கோயிற்சூழல் விளங்குகிறது.

அதைத் தான் யாழ்ப்பாண சரித்திரம், யாழ்ப்பாண வைபவ மாலை எல்லாம் தமிழரசர் கால நல்லூர் கந்தசுவாமி கோயில் பறங்கியரால் அழிக்கப்பட்டதும் கோயிற்குருமார்களான பிராமணர்கள் நீர்வேலிக்கு ஓடினர் என்று சொல்கிறது.

நல்லூரின்இராஜதானிமரபினரானகாச்யபகோத்திரத்துக் கங்காதர ஐயர் மரபாரும் நீர்வேலியிலேயே தஞ்சம் அடைகிறார்கள். அவ்வாறு இடர் நிறைந்த காலத்தில் காத்தவர் இப்பிள்ளையார்.

ஆங்கிலேயர் ஆட்சியில் கோயில் மீள் எழுச்சி காண்கிறது. பிள்ளையாரும் அவருக்கு சமமாக பாலா நாயகரான வைத்தீஸ்வரரும் இரட்டைக் கருவறைகளில் திகழும் அற்புதக்கோயில் இது.

அப்படி அரசர்களால் துதிக்கப்பட்ட நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையாரின் பெருவிழா – ஆவணி சதுர்த்தியை ஒட்டி ஆரம்பமாகியிருக்கிறது.

இந்த முதற்பிள்ளையான மூத்த பிள்ளையார் எங்களை ரக்ஷிக்கட்டும்!!

ஹ்ருதந்தரே நிரந்தரம் வஸந்தமேவ யோகிநாம்/
தமேக தந்தமேவ தம் விசிந்தயாமி ஸந்ததம்//

**தி. மயூரகிரி சிவாச்சார்யார்ம்.**



காலைக்கதிர் Kalaikkathir

# திருமலையை பொருளாதார மையமாக உயர்த்துவதே கிழக்கிற்கான அபிவிருத்தி

## அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி தெரிவிப்பு

(ஹஸ்பர்)

திருகோணமலைமாவட்டத்தைஒருபொருளாதாரமையமாகமேம்படுத்துவதன் மூலம் கிழக்கு மாகாணத்தின் வளர்ச்சியை அடைய முடியும் என்று அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலைமாவட்டச்செயலாளர்ஹேமந்தகுமாரவின்வரவேற்புரையை தொடர்ந்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஆரம்பமானது.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி கூட்டத்தில் பங்கேற்றார். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சருமாகிய அருண் ஹேமச்சந்திரா தலைமையில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில் இணைத் தலைவரான கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால், நாடாளுமன்ற உறுப்பினர்களான ரொஷான், குகதாசன், இம்ரான் மஹ்ரூப் ஆகியோரும் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டிதலங்கம, கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், நகர சபை மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மற்றும் முப்படைகளின் உயரதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

'திருகோணமலை மாவட்டத்தை ஒரு பொருளாதார மையமாக மேம்படுத்துவதன் மூலம் கிழக்கு மாகாணத்தின் வளர்ச்சியை அடைய முடியும்.' என கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி அங்கு கருத்துத் தெரிவித்தார்.

மாவட்டத்தின் கனிம வளங்களைச் சரியான முறையில் பயன்படுத்தி அவற்றிற்கு மதிப்பினை அதிகரித்து ஏற்றுமதிக்குத் தகுந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென்றும், முதலீட்டாளர்களை ஈர்க்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் கூறினார்.

மேலும், தற்போது நாட்டில் தொழில்களுக்காக பயன்படுத்தப்படுவது மொத்த நிலப்பரப்பில் 0.01% மட்டுமே ஆகும். எனவே, மாவட்டத்தில் தொழில்களுக்குப் பயன்படுத்தக்கூடிய நிலங்களைப் பதிவுசெய்து தொழில்துறை மையங்களை உருவாக்கவும், அமைச்சரவை இடையிலான ஒருங்கிணைப்பின் கீழ் செயல்படும் வகையில் திட்டங்கள் தயாரிக்கப்படவும்வேண்டும்.

மாவட்ட தொழில் குழுக் கூட்டம் மிக முக்கியமானது. எனவே அதைச் செயல்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காக ஆளும்தரப்பு வழங்கக்கூடிய உதவிகளை வழங்கவேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாகவும் இன்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டன. அத்துடன் பல அபிவிருத்திகள் தொடர்பான திட்டங்களும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் அனுமதிக்காக முன்மொழியப்பட்டன.

# வவுனியாவிற்கு வருகை தந்த தொழில் கல்வி பிரதி அமைச்சர்

## கற்கை நிலையங்களையும் பார்வையிட்டார்



வவுனியாவிற்கு வருகை தந்த தொழில் கல்விப் பிரதி அமைச்சர் நளின் ஹேவகே அவர்கள் வவுனியா மாவட்டங்களில் உள்ள தொழிற் கல்வி நிலையங்களை நேரில் பார்வையிட்டார். அவற்றின் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார். கல்வி நிலையங்களில் கற்கும் மாணவர்களுடனும் கலந்துரையாடினார்.

நைற்றா, வீற்றா, ஏரிஜ ஆகிய தொழில் கல்வி நிலையங்களை பார்வையிட்டதுடன், எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் இவற்றின் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இந்தப் பயணத்தில் கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தையும்பார்வையிட்டபிரதிஅமைச்சர், புதிதாக காபெற் இடப்பட்ட 2 கிலோ மீற்றர் நீளமான கனகராயன்குளம்-- விஞ்ஞானம் குளம் வீதியையும் திறந்து வைத்தார்.

தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெகதீஸ்வரன், திலகநாதன் மற்றும் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் அமைச்சரோடு பயணமாகினர்.

(100)



# உள்ளூராட்சிக்கான அதிகாரப்பகிர்வு அபிவிருத்திக்குத்தேவை என்பதை உணர்ந்து சபைகளை அரசு வலுப்படுத்தவேண்டும்

## உள்ளூராட்சி அமைச்சரிடம் தவிசாளர் நிரோஷ் எடுத்துரைப்பு

கிளின் சிறிலங்கா திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் மீறப்படுகின்றன. அதிகாரப்பகிர்வு மற்றும் மனித உரிமைகள் பேணப்படுவது கூட அபிவிருத்தியின் ஓர் அங்கமாகும். எனவே அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசாங்கத்தின் திட்டங்கள் வாயிலாக மீறக்கூடாது. மாறாக அபிவிருத்தியைக் காத்திரமாக்க வேண்டும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

பொது நிர்வாக மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் அபேயரட்ண மற்றும் பிரதி அமைச்சர் ரூவான் செனரத் ஆளுநர் வேதநாயகன் உள்ளிட்டவர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதானிகளை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையர் அலுவலக கேட்போர் கூடத்தில் புதன்கிழமை மாலை சந்தித்து கலந்துரையாடினர். இச் சந்திப்பில் கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களிள் ஆளணி வெற்றிடம் நாட்டின் பிறபாகங்களைக் காட்டிலும் வடக்கு மாகாணத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஆளணி வெற்றிடத்தினை நாட்டின் ஏனைய மாகாணங்கள் தேர்தல் காலத்திற்கு முன்னரான விசேட சுற்று நிருபங்களுக்கு அமைய நியமித்துக்கொண்ட போதும் எமது மாகாணத்தில் வெளிவாரிப்பணியாளர்களாக சனசமூக நிலையங்கள் ஊடாக நியமிக்கப்பட்டிருந்தமையினால் துரதிஸ்டவசமாக எம்மால் இந் நியமனங்களுள் பயனடைய முடியவில்லை. தசாப்தக் கனக்கில் பல தொழிலாளிகள் நியமனத்திற்காக ஏங்குகின்றார்கள். இவ்விடயத்தில் அமைச்சர் அவர்கள் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைத்தாக்கல் செய்து பாதிக்கப்பட்ட தரப்புக்கு நியமனத்தினை விரைவு படுத்தக்கோருகின்றோம். தொழிலாளர்களின் பிரச்சினை என்ற வகையில் இந்த அரசாங்கம் கூடிய கவனம் எடுக்கும் என நம்புகின்றோம்.

மேலும் அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளத்தில் எதிர்வரும் ஆண்டில் இருந்து தற்போது உள்ளூராட்சி மன்றங்கள் செலுத்திவரும் இருபது விகித பணத்தினை நாற்பது விகிதமாக அதிகரிக்க வேண்டிய அறிவுறுத்தல் உள்ளது. இதனை எமது சபைகள் தாங்கிக்கொள்வதில் பாரிய பிரச்சினை உள்ளது. எனவே அரசின் இக் கொள்கையில் மாற்றத்தினைக் கோருகின்றோம். அதேவேளை சபைகளின் வருமானம் பற்றிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகையில் சபையின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட அளவீட்டு முறைமைஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. காரணம் சபைகளின் நிலப்பரப்பு மற்றும் சனத்தொகைஎன்பனவேறுபட்டுள்ளன. ஆகவே சபைகளின்வருமானம்கணக்கிடப்படும்போது நிலப்பரப்பு மற்றும் சனத்தொகைக்குமான சூத்திரம் பின்பற்றப்படவேண்டும். அதுவே சரியான புள்ளிவிபரத்தரவுகளை வழங்கும். அபிவிருத்திக்கு அது அவசியமாகும்.

மேலும் உள்ளூராட்சி சேவை மூடப்பட்ட சேவையாக அமைகளில் உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களால்மக்களுக்குஆற்றப்படும் அரச சேவையினை வினைத்திறனாக்க முடியும். உள்ளூராட்சி மன்றதாய்ச்சட்டங்கள், நியமத்துணைவிதிகள்,துணைவிதிகளைகற்றுள்ள மற்றும் அனுபவப்பட்ட உத்தியோகத்தர் குழாம் மீளவும் உள்ளூராட்சி சேவைக்குள் ஈடுபடுத்தப்படுவது சிறந்தது. அவர்களை எழுந்தமானமாக மத்திய அரசாங்கத்தின் திணைக்களங்களுக்கு இடமாற்றக் கொள்கைகளுக்குள்ளாக இடம்ஜ¬ற்றுவதைத் தடைசெய்யும் தேசிய கொள்கை நாட்டில் ஏற்படுத்தப்படவேண்டும். புதிது புதிதாக உத்தியோகத்தர்கள் திணைக்களங்களில் இருந்து இடமாற்றலாகி வருவது மத்திய அரசாங்கத்தின் ஓர் திணைக்களம் போலவே உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குகின்றது.

அத்துடன் இப்போது மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்படுகின்றது. இவ் வரவு செலவுத்திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் சேவைப்பரப்பில் வருகின்ற விடயங்களுக்கான செயற்பாடுகளுக்கு ஏனைய அமைச்சுக்களுக்கு நிதியை ஒதுக்கி அதன் வாயிலாக மத்திய அரசாங்கத்தின் நிர்வாக அலுவலகமான பிரதேச செயலக வாயிலாக நிதிகள் ஒதுக்கப்பட்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதைநாம்எதிர்க்கின்றோம்.

உள்ளூராட்சி மன்றங்களின் பகிரப்பட்ட அதிகாரங்களை மீறப்படாது மாகாண சபை முறைமை ஊடாக உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக நிதியை ஒதுக்க வேண்டும். கிள்னி சிறிலங்கா திட்டத்தின் வாயிலாக உள்ளூராட்சி மன்றங்கள் முகாமை செய்யும் பஸ்தரிப்பிடங்களின் முடிவுகளைக் கூட மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தினர் முன்னெடுக்க முயற்சிக்கின்றனர். என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ், முஸ்லிம் கட்சிப் பிரதிநிதிகளை இன்று சந்திக்கின்றது அமெரிக்கக் குழு

நாட்டுக்கு வருகைந்திருக்கும் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகத்துக்கான பங்குடைமையின் பணிப்பாளர் குழுமப் பிரதிநிதிகளுக்கும் சிறுபான்மையின மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு இன்று நடைபெறவுள்ளது.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இவ்வாரம் நாட்டுக்கு வருகை தந்திருக்கும் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகத்துக்கான பங்குடைமையின் பணிப்பாளர் குழுமப் பிரதிநிதிகள் பிரதமர் ஹரினி மற்றும் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் உள்ளடங்கலாக ஆளும்தரப்பின் உயர்மட்டப்பிரதிநிதிகளையும், எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசவையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அதன் நீட்சியாக தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ் முற்போக்குக்கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளை இன்று காலை 10.45 மணியளவில் கொழும்பிலுள்ள கோல்பேஸ் ஹோட்டலில் சந்திக்கவுள்ள அமெரிக்கப் பிரதிநிதிகள், நாட்டின் ஜனநாயக மற்றும் மனித உரிமைகள் நிலைவரம், மக்கள் முகங்கொடுத்துவரும் பொருளாதார நெருக்கடிகள், அரசாங்கத்தின் தேர்தல் வாக்குறுதிகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளனர்.

இச்சந்திப்பின்போது செம்மணி மனிதப்புதைகுழி விவகாரத்தை அப்பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டுவரவிருப்பதாகத் தெரிவித்த தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன், தமிழர்கள் முகங்கொடுத்துவரும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பிலும் எடுத்துரைக்கவிருப்பதாகக் குறிப்பிட்டார்.

# பாணந்துறையில் புதனிரவு சுடுபட்டு ஒருவர் இறப்பு

பாணந்துறை பகுதியில் புதன்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இருவர் வீடொன்றில் இருந்த ஒருவரை இலக்கு வைத்து துப்பாக்கியால் சுட்டு விட்டுச் தப்பிச்சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறைதெற்கு பொலிஸ்பிரிவுக்குட்பட்ட அளுபோகஹவத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் புதன்கிழமை இரவு இந்தத்துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வருகை தந்த அடையாளம் தெரியாத இருவர் இந்தத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். 55 வயதுடைய அளுபோகஹவத்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே சம்பவத்தின் போது உயிரிழந்துள்ளார். திட்டமிட்டக்குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாகக்கூறப்படும் பாணந்துறைசலிந்துவினால் இந்தத்துப்பாக்கிப்பிரயோகம் ஒழுங்கமைக்கப்பட்டு இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

உயிரிழந்த குறித்த நபர் பாதாள உலக்குழுவின் உறுப்பினர் என அறியப்படும் பாணந்துறை திலங்க என்பவரின் மாமா என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தநிலையில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சந்தேகநபர்களை கைது செய்ய பாணந்துறை தெற்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதனிடையே இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 89 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.அதில் 48 பேர் கொல்லப் பட்டுள்ளதுடன் 50 பேர் காயமடைந்துள்ளனர்.

# பவளப்பாறைகளைக் காக்க திருமலையில் கருத்தரங்கு

திருகோணமலை,குச்சவெளி கடல் பகுதிகளில் பவள பாறைகளை பாதுகாத்தல் மற்றும் சுற்றுலாதுறையை மேம்படுத்தல் தொடர்பக ஐ.யு.சி.என். (IUCN) அமைப்பின் அனுசரணையில் இலங்கை பவளப் பாறைகள் முன்முயற்சி (Sri Lanka Coral Reef Initiative) எனும் தொனிப்பொருளில் இரண்டு நாள் கருத்தரங்கு திருகோணமலை சர்வோதயத்தில் இடம்பெற்றது.

கரடிமலை மற்றும் சல்லிமுனை போன்ற இடங்கள் முக்கியசுற்றுலாதளங்களாகஅடையாளப்படுத்தப்பட்டதுடன் இந்த இடங்கள் பற்றிய முழு விளக்கமும் அளிக்கப்பட்டது. இதன் மூலம் எதிர்காலத்தில் பல்வேறு கடல்சார் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுப்பது பற்றி விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதில்கரேயோரமூலவளங்கள்பாதுகாப்புதிணைக்கள அதிகாரிகள் மற்றும் துறை சார் உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# குளியாப்பிட்டிய விபத்தில் சாரதிக்கு விளக்கமறியல்

குளியாப்பிட்டியில் புதன்கிழமை இடம்பெற்ற வாகன விபத்துடன் தொடர்புடைய டிப்பரின் சாரதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று குளியாப்பிட்டிய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவரை எதிர்வரும்

8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் ரந்திக லக்மல் ஜெயலத் இதற்கான உத்தரவை பிறப்பித்தார்.

விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணை அறிக்கைகளை மன்றில் சமர்பித்து குறித்த டிப்பரின் சாரதி 24 மணி நேரத்திற்கும் மேலாக தூக்கமின்றி வாகனம் செலுத்தியுள்ளதுதாகவும் இதற்கமைய குறித்த டிப்பர் வண்டியின் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் மன்றுக்கு அறிவித்தனர்.

குளியாப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்லேவெல பிரதேசத்தில் மாதம்பையில் இருந்து குளியாப்பிட்டிய நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற வேன் எதிர்திசையில் மணல் ஏற்றிக்கொண்டு வந்த டிப்பருடன் நேருக்கு நேர் மோதி புதன்கிழமை காலை விபத்துக்குள்ளாகியிருந்தது.

விபத்தில் படுகாயமடைந்த 12 மற்றும் 13 வயதுடைய மாணவர்கள் இருவரும் 63 வயதுடைய வேனின் சாரதியும் உயிரிழந்திருந்தனர். மேலும் 13 பேர் இதன்போது காயமடைந்திருந்தனர்.

எவ்வாறாயினும் விபத்து தொடர்பில் குறித்த டிப்பரின் சாரதி பொலிஸாரால் புதன்கிழமை கைது செய்யப்பட்டு நேற்று குளியாப்பிட்டிய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். இதற்கமையவே அவரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

# அனுமதியின்றி மாடுகள் ஏற்றிச் சென்ற வாகனம் செட்டிகுளத்தில் மடக்கிப் பிடிப்பு

செட்டிகுளம் - சிப்பிக்குளம் பகுதியில் முறையான அனுமதி பத்திரமின்றி மாடுகளை ஏற்றி வந்த வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று செட்டிகுளம் பொலிசார் தெரிவித்தனர்.

வவுனியா, செட்டிகுளம், சின்னச் சிப்பிக்குளம் பகுதியில் பயணித்த பாரவூர்த்தி ஒன்றை சோதனை செய்த போது முறையான அனுமதியின்றி மாடுகள் கொண்டு செல்லப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த மாடுகள் மீட்கப்பட்டதுடன், குறித்த வாகனத்தை கைப்பற்றிய பொலிசார் அதனை செலுத்தி வந்த சாரதியையும் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்டநபரிடம்மேலதிகவிசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக செட்டிகுளம் பொலிசார் தெரிவித்தனர். (100)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.08.2025இல் வெளியிடப்பெற்றது